உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அருணந்திசிவாசாரியார்

திருவாய்மலர்ந்தருளிய

# சிவஞானசித்தியார்மூலமும்

உமாபதிசிவாசாரியார் திருவாய்மலர்ந்தருளிய

சிவப்பிரகாசமூலமும்

வினாவெண்பாமூலமும்.

இவை

சாக்கிர் ஆரணி ம-ா-ஸ்ரீ

காசி- நாராயணசாமிமுதலியாரவர்களும்,

ஷை ஊர் ம-ா-ஸ்ரீ- சந்நியாசி

குப்புசெட்டியாரவர்களும்,

பலகால்வேண்டிக்கொண்டபடி

திரிசிரபுரம்.

வித்வான்

மதுரைநாயகம்பிள்ளையவர்களால்

பிழையறப்பரிசோதித்து

சென்னபட்டணம்.

லைசியம்பிரசில் அச்சிட்டப்பட்டன.

அட்சய௵ ஐப்பசி௴

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# நூற்சிறப்பு.

—o—

## சிவஞானசித்தி சமவாதவுரை மறுப்பு.

சிவஞானசித்தி சிவாகமார்த்தங்களுக்கெல்லா முரையாணியாய்ச் செய்துவைத்திருக்கிறதென்றுலோகப்பிரசித்தியானதினாலே.

## வெண்பா.

### சிவபோகசாரம்.

ஆறாறுதத்துவமு மாணவமும் வல்வினையு ... ... ...*
நீறாகமுத்திநிலை நிற்போர்க்குப்—பேறாகப் ... ...*
பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச்சித்தியிலே ...*
யோர்விருத்தப்பாதிபோதும். .. ... ... .. ...*

### பழமொழி.

சிவத்திற்குமேற்றெய்வமில்லை ... ... ...*
சிவஞானசித்திக்குமேற் சாத்திரமில்லை ... ...*

## நூலைத்தமிழிலியற்றவேண்டுங்காரணம்.

சீரார்கயிலைத் திருவாய்மலர்ந்த சிவாகமங்கற் ... ...*
றோராய்வதுவட சொற்பயின்றார்க்கெளி தம்மொழியைச் ... *
சாராதவருமத் தத்துவஞானந் தலைப்படுதற் ... ... ...*
கோரார்தமிழ்ச்செய்யு ளாமையறிந் தெழுதுவனே... ...*

## பரபக்கத்தின்பாடற்றொகை.

முகவுரையிற்றசமெழுமூன்றதன்முப்பானொன்று ... ...*
மூதுலகன்முப்பானொன்றெண்ணைந்தாம்புத்தன்... ...*
றிகழ்மூவர்க்கோரொட்டாநிகண்டனுக்கெட்டீரேழ் ... ...*
சீவகனுக்கீரைந்தோடிருமூன்றும்பாட்டன் ... ...*
பகர்பதின்மூன்றீரைந்தேபாகரனீரிரண்டாம் ... ... ...*
பரிணாமநான்கிருநான்கேமாயாவாத ... ... ...*
நிகழைம்மூன்றறுமூன்றும்பாற்கரியத்கேழா ... ... ...*
நிரீசுரர்க்குச்சதுராத்திரியெழுமுப்பானொன்றே ... ...*

## சுபக்கத்தின்பாடற்றொகை.

அய்ந்துதுதி யீரேழு மளவையாகு ... ... ... ...*
மாதிசனி லெழுபதுபின் றெண்ணூற்றுறு... ... ...*
நந்துசதுட்டைய நாற்பானவமும் பின்னவமு ... ... ...*
நனிநான்கு நாற்பதினி லொன்றிழிந்தீராறுங் ... ...*
கந்தன்முக மோராறுங் கரமங்கீராறுங் ... ... ...*
கருதிடுவங் கணபதியைங் கரமுமிருபதமுஞ் ... ...*
சிந்தையிவை மூவொன்ப தொடுமுந்நூறுஞ் ... ... ...*
சிவஞான சித்திசுவ பக்கமெனத்தெளியே ... ...*

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவஞானசித்தியார்பரபக்கமூலம்.

---

## கணபதிவணக்கம்.

ஒருகோட்ட னிருசெவியன் மும்மதத்த னல்வாயைங் கரத்த
னாறு-தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான் றருமொ
ருவா ரணத்தின்றாள்க-ளுருகோட்டன் பொடும்வணங்கியோ
வாதே யிரவுபக லுணர்வோர் சிந்தைத் - திருகோட்டு மயன்
றிருமால் செல்வமுமொன் றோவென்னச் செய்யுந்தேவே...*

## சிவத்துதி.

ஆதிநடுவந்தமிலாவளவில்சோதி ... ... ...*
யருண்ஞானமூர்த்தியாயகிலமீன்ற ... ... ...*
மாதினையுமொருபாகத்தடக்கிவானோர்... ... ...*
மகுடசூளாமணியாய்வையம்போற்றப்... ...*
பாதிமதியணிபவளச்சடைக்கடாழப் ... ... ...*
படவொளியம்பலத்தாடும்பரனார்பாதத் ... ...*
தாதுமலிதாமரைகள்சிரத்தேவைத்துத்... ... ...*
தளராதபேரன்புவளராநிற்பாம் ... ... (க)

## சத்திவணக்கம்.

ஈசனருளிச்சையறிவியற்றலின்ப ... ... ...*
மிலயமொடுபோகமதிகாரமாகித் ... ... ...*
தேசருவமருவுருவமுருவமாகித் ... ... ...*
தேவியுமாய்த்தேசமொடுசெல்வமாகிப் ... ...*

பேசரியவுயிரையெலாம்பெற்றுநோக்கிப் ... ... *
பெரும்போகமவையளித்துப்பிறப்பினையுமொழித்திட் *
டாசகலுமடியருளத்தப்பனுடனிருக்கு ... ... *
மலையருட்பாதமலர்சென்னிவைப்பாம்... ... (உ)

விநாயகர்வணக்கம்.

இயம்புநூலிருந்தமிழின்செய்யுளாற்று ... ...*
விடையூறுதீர்ந்தினிதுமுடியவேண்டித்... ...*
தயங்குபேரொளியாகியெங்குநின்ற... ... ...*
தலைவனார்மலைமாதுதன்னோடாடிப் ... ...*
பயந்தவைங்கரநாற்றோண்முக்கணிருபாதப் ... ...*
பரியவொருநீள்கோட்டுப்பெரியபண்டிக் ... ...*
கயந்தனடிக்கமலங்கணயந்துபோற்றிக் ... ... *
கருத்திலுறவிருத்திமிகக்காதல்செய்வாம்... ... (௩)

கந்தன்வணக்கம்.

அருமறையாகமமங்கமருங்கலைநூறெரிந்த ... ...*
வகத்தியனுக்கோத்துரைக்குமருட்குருவாங்குருளை ... *
திருமறைமாமுனிவர்முனிதேவர்கடந்தேவன் ... ...*
சிவனருள்சேர்திருமதலைதவநிலையோர்தெய்வம்... ...*
பொருமறையார்கழல்வீரர்வீரன்கையிற் ... ... ...*
பூநீர்கொண்டோவாதுபோற்றுமடியவர்கள் ... ...*
கருமறையாவகையருளிக்கதிவழங்குங்கந்தன் ... ...*
கழலிணைகளென்சிரத்திற்கருத்தில்வைப்பாம் ... (௪)

குருவணக்கம்.

பண்டைமறைவண்டரற்றப்பசுந்தேன்ஞானம் ... ...*
பரிந்தொழுகச்சிவகந்தம்பரந்துநாறக் ... ...*
கண்டவிதையக்கமலமுகைகளெல்லாங் ... ...*
கண்டிறப்பக்காசினிமேல்வந்தவருட்கதிரோன் ...*

விண்டமலர்ப்பொழில்புடைசூழ்வெண்ணெமேவு ... ...*
மெய்கண்டதேவன்மிகுசைவநாதன் ... ...*
புண்டரீகமலர்தாழச்சிரத்தேவாழும்... ... ...*
பொற்பாதமெப்போதும்போற்றல்செய்வாம் ... (௫)

## அவையடக்கம்.

மாலயன்மாமறையறியாவாதிமார்க்கம் ... ...*
வையகத்தாகமம்வேதமற்றுமுள்ள ... ...*
நூலையெலாமுணர்ந்திறைவன்கழலேநோக்கு ... ...*
நோன்மையருந்தவர்முனியானுவலுமாறு ... ...*
வேலையுலாவுந்திரைகள்வீசியேறி ... ... ...*
வேறேழுமொன்றாகிநின்றபோது ... ...*
சாலவுமான்குளப்படியிற்றங்கிநின்ற ... ... ...*
சலமதுதானேயொன்னுந்தன்மைத்தாலோ. ... (௬)

## இதுவுமது.

நீடுபுகழுலகுதனின்மைந்தர்மாதர் ... ... ...*
நேயமொடுதாம்பயந்தபுதல்வர்வாயிற் ... ...*
கூடுமொழிமழலையொடுகுழறியொன்றுங் ... ...*
குறிப்பரிதாயிடினுமிகக்குலவிப்போற்றி ... ...*
மாடுமக்கிருவென்றுகொண்டுவாழ்வ ... ...*
ரதுபோலமன்னுதமிழ்ப்புலமையோரென் ... ...*
பாடுகவிக்குற்றங்கள்பாராரிந்நூல் ... ... ...*
பாராட்டாநிற்பரருட்பரிசினாலே. ... ... (௭)

## நூற்சிறப்பு.

சுத்தவடிவியல்பாகவுடையசோதி ... ... ...*
சொல்லியவாகமங்களெலாஞ்சூழப்போய் ... ...*
மொத்துமுடியுங்கூடவோரிடத்தே ... ... ...*
யொருபதிக்குப்பலநெறிகளுளவானற்போற் ...*

பித்தர்குணமதுபோலவொருகாலுண்டாய்ப் ... ...*
பின்னொருகாலறிவின்றிப்பேதையோராய்க் ...*
கத்திடுமான்மாக்களுரைக்கட்டிற்பட்டோர் ... ...*
கனகவரைகுறித்துப்போய்க்கடற்கேவீழ்வார். ... (அ)

## நூற்கதிகாரியும்-நூல்வழியும்-நூற்பெயரும்.

போதமிகுந்தோர்தொகுத்தபேதைமைக்கே ... ...*
பொருந்தினோரிவர்க்கன்றிக்கதிப்பாற்செல்ல ...*
வேதநெறியெனுமவர்கட்கறியமுன்னு ... ...*
ளிறைவனருணந்திதனக்கியம்பநந்தி ... ...*
கோதிலருட்சனற்குமாரர்க்குக்கூறக் ... ... ...*
குவலயத்தினவ்வழியெங்குருநாதன்கொண்டு ...*
தீதகலவெமக்களித்தஞானநூலைத் ... ... ...*
தேர்ந்துரைப்பன்சிவஞானசித்தியென்றே ... (கூ)

## நூற்கருத்து.

இறைவனையுமிறைவனுலியம்புநூலு ... ... ...*
மீண்டளவும்பொருளியல்பும்வேண்டுஞ்செய்தி ...*
முறைமைகளும்பெத்தமொடுமுத்தியெல்லா ... ...*
மூதுலகிலெமக்கியன்றமுயற்சியாலே ... ...*
சிறையுலவும்புனனிலவத்தோன்றும்பேய்த்தேர்ச் ...*
செய்கைபோலுண்டாயபொய்கொண்மார்க்கத் ...*
துறைபலவுங்கடாவிடையாற்சொல்லிப்போக்கித் ... ...*
துகடீரவிந்நூலிற்சொல்லகிற்பாம். ... (௰)

பாயிரமுற்றிற்று.

---

## உலோகாயதன்மதம்.

இந்திரபுரோகிதனியம்புமொருநூலின் ... ...*
றந்திரமெனுதறிவினோடருளிலாமற் ... ... ...*
சந்தணைபுயத்துமணமாலைகடயங்க் ... ... ...*
வந்தியுலகத்துலோகாயதனுரைப்பான். ... ... (௧)

கண்டளவைகாட்சிமனமாதிபிருமூன்று ... ...*
வேண்டுமனுமானமுதலானபலவேண்டா ... ...*
பூண்டபொருள்பூதமவைபுகழ்கடினசீதந் ... ...*
தீண்டரியவெம்மைசலனத்தினொடுசேர்வே. ... (௨)

சாற்றுபெயரானவைதலம்புனல்கனற்பின் ... ...*
காற்றுமெனலாமிவைகலந்தகுணமோதி ... ...*
னாற்றமிரதம்முருவநற்பரிசமாகும் ... ... ...*
போற்றுமிவைநித்தவியல்பாமிவைபுணர்ப்பே... ... (௩)

ஒத்துறுபுணர்ச்சியினுருக்கள்பலவாகும் ... ...*
வைத்துறுகடாதிபலமண்ணின்வருமாபோற் ... ...*
புத்திகுணநற்பொறிபுலன்களிவையெல்லா ... ...*
மித்தின்வருநீரினிலெழுங்குமிழியொத்தே... ... (௪)

பூதமதினொன்றுபிரியப்புலனிறக்கு ... ... ...*
நீதியினிற்பனநடப்பனவுமுற்போ... ... ...*
லோதும்வகையாகியுறுகாரியமுலந்தா ... ... ...*
லாதியவையாமிதனையறிவதறிவாமே ... ... (௫)

வேறு.

இப்படியன்றிக்கன்மமுயிரிறைவேறுண்டென்று ... ...*
செப்பிடுமவர்க்குமண்ணோர்செய்திடுங்குற்றமென்னோ ...*
வொப்பிலாமலடிபெற்றமகனொருமுயற்கொம்பேறித் ...*
தப்பிலாகாயப்பூவைப்பறித்தமைசாற்றினோ ... (சா)

செய்திடுங்கன்மமெல்லாஞ்செய்தவர்தம்மைப்பற்றி ... ...*
யெய்திடுமென்னினிங்கேமாய்ந்திடுமேய்வதெங்ஙன்... ...*
மெய்தருதூலங்கெட்டுச்சூக்கமாய்மேவுமென்னி ... ...*
லையனேதீபம்போனலதனொளியாவதுண்டோ ... ... (எ)

மாய்ந்துபின்வயலிலிட்டவைதழைபலிக்குமாபோ ... ...*
லேய்ந்திடுங்கன்மமென்னிலிட்டிடத்திசையுமேனி... ...*
யோய்ந்துவந்தவனாயுண்ணப்பண்ணுஞ்சோறுதரத்தற்றால் *
வாய்ந்திடும்பலம்வயிற்றிற்கொண்டிடும்வழக்குவைத்தாய் (அ)

உருவமுமுணர்வுஞ்செய்தியொத்திராகன்மமென்னின் ...*
மருவுகைவிரல்கடம்மின்வளர்வுடன்குறைவுண்டாகி... ...*
வருவதிங்கென்னகன்மஞ்செய்துமுன் மதியிலாதாய்... ...*
பெருகுபூதங்கடம்மின்மிகுகுறைப்பெற்றியாமே ... ... (கூ)

இன்பொடுதுன்பமெல்லாமெய்துவகன்மமென்னி ... ...*
னன்புனல்சந்தனதிநணுகவுமணுகவொண்ணு ... ...*
மின்பொலியழலினேடுமேவவுநன்மைதீமை ... ...*
யென்செய்ததியம்பிடாய்நீயிவையெலாமியல்பதாமே.., (ம)

காயத்தின்குணமதன்றிக்கண்டதான்மாவுண்டாயின் ...*
மாயத்திற்சொல்லிடாதேமனமுதலாறினுக்கு ... ...*
நேயத்ததாகவேண்டுமன்றியேநிகழ்த்துமுண்மை ...*
தேயத்தின்முயற்கொம்பெல்லைசெப்புவோர்செய்தியாமே. ()

அருவமேயிறைவனாகிலறிவின்றாகாயமாகு ... ...*
முருவமேயென்னிற்பூதகூட்டத்தினொருவனாகு ... ...*
மருவியவிரண்டுங்கூடிநிற்பவனென்னின்மண்மே ...*
லிருவிசும்பொருகல்லேந்திநிற்குமோவியம்பிடாயே. (௰௨)

பூதத்தேயன்னமாகியன்னத்தாலுடலும்புத்தி ... ...*
பேதித்தேமன்முமாகிப்பிரிந்தமைதிருந்தவின்று ... ...*
வேதத்தேயுளாக்கவென்னேமேதினியோர்களெல்லாங் *
கேதத்தேவீழ்ந்துவேறுநெறியலகேட்குமாறே. (௰௩)

போகத்தை மண்ணிற்கண்டுவிட்டுப் போய்விண்ணிற்சொள்ள
மோகத்தராகியல்லன்முயன்றுழன்றூடரெல்லாந் ...*
தாகத்திற்றண்ணீர்கண்டுவிட்டுப்போய்த்தண்ணீர்கேட்டுச் *
சோகித்தேயுண்ணவெண்ணித்துயருறுவார்களந்தோ. (௰௪)

வாழவேவல்லைவாமிவலக்கைதாவென்னுயிர்க்குத் ...*
தோழனீயுன்னையொப்பார்சொல்லிடினில்லைகண்டாய் ...*
கோழைமானுடர்தீதென்னுங்கொலைகள்வாதிகொண்டே *
சூழும்வார்குழலார்மொய்ப்பச்சுடரெனத்தோன்றினுயே. ௰௫

ஈசனாரயனார்மாலோடிந்திரன்றெரிவைமார்பாற் ... .. *
பேசொணுவகைகளெல்லாஞ்செய்தன்ரோபெரியோரானு *
ரர்சையாலவர்போனுமுமாகவேவேண்டுமாயின் ... *
வாசமார்குழலாரோடும்வல்லவாகூடிவாழ்மின். ... (௰௬)

தையலாருடலாடத்தாமவரோடுங்கூடிச் ... ...*
செய்யதாமரையைவென்றசீறடிசெப்பஞ்சூட்டி ... ...*
மெய்யெலாம்பாதஞ்சூடும்வேடத்தார்மெய்யிற்கூடா *
மையன்மானுடர்பொய்ம்மார்க்கவேடத்தேமாய்கின்றாரோ. ()

வாசமார்குழலினார்கண் மணியல்குற்றடத்தேமூழ்கி ... *
நேசமார்குமுதச்செவ்வா யமுதினை நிறையவுண்டு ... ...*
தேசுலாமணிமென்றோண்மேற் சேர்ந்துவீற்றிருந்திடாதே...*
மாசுலாமனத்தோரெல்லா மறுமைகொண்டழிவர்மன்னோ. ()

மதிநிலாநுதலாரோடு மணிநிலாமுன்றிலேறி ... ...*
முதிர்நிலாவெறிப்பச்செவ்வா யிளநிலாமுகிழ்ப்பமொய்த்த *
கதிர்நிலாவடங்கொள்கொங்கைக் கண்கண்மார்பகலமூழ்கும்*
புதுநிலாவியநன்போகம் விடுவர்புன்சமயத்தோரோ....(கசு)

ஊடுவதுணர்வதுற்ற கல்விமங்கையரையுள்கி ... ...*
வாடுவதடியில்வீழ்ந்து வருந்துவதருந்தவம்பின் ... ...*
கூடுவதுணர்வுகெட்டுக் குணமெலாம்வேட்கையேயாய் ...*
நீடுவதின்பமுத்தி யித்தினின்றார்கண்முத்தர். ... (உ0)

வீட்டினையுளதென்றோடி மெலிவதிங்கென்னைவீடு ... ...*
காட்டுவோர்கண்டோர்கேட்டோர்கரியவையுண்டேற்காட்டீர்
நாட்டினிலரசனுனைக் கிசையவேநடந்துநாளு ... ...*
மீட்டியபொருள்கொண்டிங்கே யின்பத்துளிசைந்திடீரோ(உக)

உலோகாயதன்மத முற்றிற்று.

---

## உலோகாயதன் மதமறுதலை.

### வேறு.

உள்ளதாவது கண்டதென்றுணா கொண்டதென்னுலகத்துநீ *
பிள்ளையாய்வளர்கின்றநாளுனைப் பெற்றதாயொடுதந்தையைக்
கள்ளமேபுரிகால்லுருயி ருண்ணவின்றெருரு காளையாய் ... *
மெள்ளவேயுளரென்றுகொண்டு விளம்புமாறுவிளம்பிடே. ()

இடித்துமின்னி யிருண்டுமேக மெழுந்தபோதிது பெய்யுமென்
றடுத்ததும்மகில் சந்தமுந்தி யலைத்துவார்புன லாறுகொண் *
டெடுத்துவந்திட மால்வரைக்க ணிருந்துகொண்டல் சொரிந்த
தென்று - முடித்ததும்மிவை காட்சியன்றனு மானமென்று
மொழிந்திடே. ... ... ... ... ... (௨)

காண்டலோவனுமானமாவதுங் காட்சிமுன்னதுங்காட்சியேற்
பூண்டபூதவுடம்பினுள்ளெழு போதமென்கொடு கண்டனை *
மாண்டவாயின் மனங்கொண்ஞான முணர்ந்ததும்மனு மான
மென்-றீண்டுபூதமியைந்ததிவ்வுட லென்பதென்பிரமாணமே.

பழுதிலாமறை கண்டநூல்பழுதின்றியுண்டது பாரின்மேன் *
மொழிவர்சோதிடமுன்னியின்னதுமுடியுமென்பதுமுன்னமே
யழிவிலாதது கண்டனம்மவை யன்றியுஞ்சில வாகமங்களி *
மொழுகியோர்படி யென்றுகொண்டிரு நிதியெடுப்பது மெண்
ணிடே ... ... ... ... ... ... (௪)

பூதமானவைநித்தமென்றுபுகன்றதென்னையுருக்களா ...*
யாதலோடழிவாகுமாதலினுக்குவோர்வரவேண்டிடுங் *
காதலோடுகெடாதிமண்கொடியற்றுவோருளர்கண்டனஞ் *
சீதநீரிலெழுந்தகொப்புணிகழ்ந்தமாருதத்செய்கையே. (௫)

நீரின்வந்தெழுகொப்புணீரதுவாயெழுந்நிசழ்பூதமு ... *
மோரின்வேறுணர்வாயெழாவவைபூதமாகியுதித்திடுந் ...*
தேரினூற்டைகாய்செறிந்தவைசேரவேறுசிவப்பெழும் ...*
பாரினிற்பிரியாதுபுந்திபழிப்புடம்புகிடக்கவே. ... (௬)

கூறுசேர்வையின் வந்தபோது சிவப்பெனுங்குணமொன்றுமே
வேறுவேறுபுலன்குண்ங்களுடற்கண்வந்துவிளைந்ததென் *

னூறுகாயமடைகூடும்வேறொருவன்றனாலெனநோக்கிநீ ...*
தேறுபூதசெயற்கும்வேண்டுமொருத்தனென்றுதெளிந்திடே()

ஆனவைம்பொறியுண்டிரித்திரையச்சமைதுனமாதியா ...*
வூனின்வந்திடுமுன்பிலாதவை யென்றுரைக்கினு லூதைபோல்
வானின்வந்திடுமாதராணவியாகிமானுடராதியா ... ...*
யோனிபன்மையுமின்றுபூதமுறும்புணர்ச்சியோர்தன்மையே.

ஐந்துநான்கொருமூன்றிரண்டடனொன்றதாயுடலங்களின் *
வந்திடாவுணர்விந்தியங்களுநம்வன்னபன்மையுபின்மையாம் *
புந்தியோடியவன்னபோகருண்ங்கள்பூதபுணர்ச்சிதான் ...*
றந்திடாதிவைபேதமாயிடவந்தவாவினைதந்தவா. ... (கூ)

அறிவுபூதமதென்னின்வேறுபுறத்தறிந்தமைகண்டிலஞ் ...*
செறிவுதானுடலத்தெனிற்சவமானபோதுடறேருமோ ...*
குறிகொளாதுடல்வாயுவானதுகூடிடாமையினென்னின் *
பிறிதராதுயிர்நிற்கஞானமுறக்கமென்பிறவாததே. ... (ம)

அறிவுடற்குணமென்னிலானையதாதியந்தமெறும்பதா ... *
முறுமுடற்பெரிதானவற்றினுதித்திடும்பெரிதாகவே ...*
சிறுவுடற்செறிஞானமுஞ்சிறிதாயிடும்பரிணமமும் ... *
பெறுமுடற்சிறிதாவதென்பெரிதாவதென்சிலபேசிடே. (மக)

போதமும்மெலிவாகியும்மலிபூதமானவைகூடலிற் ... *
பேதமோடுபெருத்துடற்கள்சிறுத்தபெற்றிமையென்றிடி *
ஞேதுடற்பெரிதானவுஞ்சிறிதாயிடாசிறிதானவு ... ...
நீதியிற்பெரிதாயிடாமுனமுள்ளதன்மையினீடுமே. (மஉ)

இயல்புகாணிவை யென்னின்வேறிசை பெண்ணோடாணிரு த
ன்மையாஞ் - செயல்கொளாவிவர் செய்திகாரண மாகவந்து

செனிப்பதே - னியல்பதாமுடல் பூதகாரிய மாவதும்மிலே யா
குமான் - மயலதாம்வினே யாலொருத்தன் வகுத்ததன்மையின்
வந்ததே. ... ... ... ... (௰௫)

காரணம்மவையென்றதென்னைகடாதிபோனிகழ்காரிய ...*
நேரணைந்துசமைந்துநின்றிடுமென்பதும்மதுநேர்கிலோம் *
போரணைந்திடுமொன்றேடொன்றுபொருந்துமாயின்வருந்தியு
நீரணைந்தொருநீயினின்றதுகண்டதாயினிகழ்த்திடே. (௰௬)

பூதமேவுபுணர்ச்சியேபுரிகாயகாரணமாகுமேற் ... ...*
காதலாணுடுபெண்ணுமேவுபுணர்ச்சிகாரணமாவதென் *
றுதியேயுலகத்திலாணுடுபெண்ணுமாயணேகாரிய ...*
நாதனுயகியோடுகூடிநயந்தகாரணமென்பரோ ... (௰௭)

கந்தம்வெம்மைகலந்திடும்புனல் கன்மமென்செய்ததென்றனே
சந்தனந்தழல்சாரநீருதன்மையுற்றிடுமாறதோர் ...*
தந்தகன்மமிரண்டணைந்துதருஞ்சுகத்தொடுதுக்கமுஞ் ...*
சிந்தியாவெழுசிவனுற்றிடும்வேறுடற்கிலேதேறிடே. (௰௮)

இன்பமெய்தியிருந்துநீவினையில்லையிங்கியல்பென்றிடிற் *
றுன்பமெய்திடு வானென் மற்றிது சொல்லிடாய்சொல வில்லே
யேன் - முன்புசெய்திடு கன்மமென்றறி கன்மமும்முதலவன
றிந் - தன்பினுலுறுவிக்குமப்பயனுங்கமைப்பொடநாதியே ()

அநாதிC. லமைவின்றெனின்மலமாயைகன்மமணுச்சிவ ...*
னநாதிகன்மமணுக்கள்செய்யவறிந்துகன்மமுடற்செயா ...
வநாதிகாரியமாமுடற்களசேதனம்மணேயாவறிந் ... ...*
தநாதியாதியமைக்கவேண்டுமெனமப்பினேடுமநாதியே. (௰௯)

காணொணுகரணங்களுச்குயிர்கண்டிடாமையினின்றெனிற்
காணுமோகடங்கண்டகண்ணிலைக்கண்டு நிற்பதுங்கண்ணதே
காணொணுதுயிர்தானுமிப்படிகண்டிடுங்கரணங்களைக் .. *
காணொணுகரணங்களுக்குயிருண்மையாவதுங்கண்டிடே (௰௯)

அங்கியானதுதானுமொன்றையணைந்துநின்றுநிகழ்ந்திடும் ...*
பங்கியாதுயிர்தானுமிப்படிபற்றியல்லதுநின்றிடா ... *
தெங்குமார்தமிலத்தையுண்டெழுதீபமானதெரிந்திடு ...*
மங்கதாமுடனின்றுகன்மமருந்தியாருயிராவதே. ... (உ௰)

அறிவுதானுடலத்தின்வேறதுவாயிறந்துபிறந்திடி ... ...*
னறிவுமுன்புளதிங்குவந்துமறிந்திடாமையதின்றெனி ... *
னறிவையோகனவத்துநீநனவத்தையன்றுதரத்திருந் ...*
தறியுமவ்வறிவோமயக்கறிவாதலாலறியாதுகாண். (உக)

இறந்திடும்மறிவேபிறந்திடுமென்பதிங்கிசைய :தெனி ...*
லுறங்கிடும்பொழுதின்றிநின்றுணர்விங்குதித்திடுமாறதோர் *
பிறந்தவிவ்வுடல்போகவேறுடல்பின்புவந்தமைபேசிடின் *
மறந்திடுங்கனவத்தில்வேறுடல்வந்தவாறுமதித்திடே. (உஉ)

கரணம்வாயுவிடத்தடங்கவடங்கிவந்தெழுகாரிய ... ...*
மரணமானவிடத்துமற்றிவைமாய்ந்துபின்புவருஞ்செயல் *
கிரணமார்கலைகெட்டுதிப்பவிறப்பினோடுபிறப்பையுந் ...*
தரணியோர்கண்மதிக்குணாப்பருயிர்க்குமிப்படிச்சாற்றிடே ()

பூதமானவைகாரியங்கள்பொலிந்துமன்னியழிந்திடு ...*
மாதலாலொருநாதனிங்குளனென்றறிந்துகொளையனே ...*
பேதமானகடாதிமண்ணினில்வந்தவாறுபிடித்திடற் ... ...*
கோதிலாதகுலாலனல்வருசெய்கையென்றுகுறிப்பரோ (உச)

வேதனாரணனாரணம்மறியாவிழுப்பொருள்பேதைபாற் ...*
றூதனாயிருகானடந்திடுதோழன்வன்மைசெய்தொண்டனுக் *
காதலாலடியார்களுக்கெளியானடிக்கமலங்கணீ ... ...*
காதலாலணையீண்டன்வேண்டின விம்மையேதருங்கண்டிடே.

பொன்குலாவுமணிக்கலன்தண்மலம்புகிற்கைபொருந்திடா *
மின்குலாமிடையார்கடா முலகத்தின்வேட்கை விடும்பொருள்
புன்புலான்மலமூத்திராதிபொசிந்துநாறுபுலைக்கல [யே.
மென்கொலாமிவர் மேல்விழுந்ததிவற்றினென்பெற வெண்ணி

தோலிரத்தமிறைச்சிமேதையெலும்புமச்சைசுவேதநீ *
ராலெடுத்தமூடைக்குரம்பையமுக்கினோடுபுழுக்குழா ...*
நூலொழுக்கிடுகோழையீரனுளைக்குமூத்திர்பாத்திரஞ் ... *
சேலடர்த்தகண்ணார்களென்பதுதேர்மலத்திரடிண்ணமே. ௨௭

ஆசையுற்றுழல்சூகரங்களசுத்தமேவியளைந்துதின் ... *
றேசுகித்தனவாயிடுஞ்சுகமேழையோடுறுமின்பநீ ... ...*
மாசதற்றெளிர்நித்தசுத்தவளந்தருஞ்சுகவாரிகா ... ...*
ணீசனுக்கடிமைத்திறத்தினியைந்துநாம்பெறுமின்பமே (௨௮)

குரோதமேகுணமாயிருந்தவர்சாந்திநன்மைகுறிக்கொளா *
ரராகமேயணைவார்களாசையறுத்தவின்பமறிந்திடார் ...*
பராவுதேவர்பராவுதூயபராபரன்னடிபற்றிநீ ... ...*
விராவுமெய்யில்விடாதவின்பம்விளைந்திடும்மிதுமெய்மையே ()

காமமாதிகுணங்களைச்சுகமென்றுகொண்டனைகாதலாற் ...*
றாமமாரழலர்கிசீதமலிந்தபோதுசுகந்தரு ... ...*
நாமமார்தருசீதம்வெம்மைநலிந்தபோதுதருஞ்சுகஞ் ...*
சேமமாகியவின்பமாமிகுதெய்வநன்னெறிசேரவே. (௩௰)

படிக்குநூல்கள்சிவாகமம்பசுபாசமோடுப்பதித்திற ... ...*
மெடுத்தியம்புவதீசன்வார்கழலேத்திடுந்தொழிலென்றுமே *
விடுத்திடும்பொருள்காமமாதிகள்வேண்டிடும்பொருளீண்டருள்
முடித்துமும்மலம்விட்டுநின்மலனோடுநின்றிடன்முத்தியே ()

உலோகாயதன்மதமறுப்பு முற்றிற்று.

——o——

## பௌத்தரிற்சௌத்திராந்திகன்மதம்.

நீதியார்வேதநூலினெறியலாவறங்களனு ... ...*
மோதியோரைந்துசீலமுடையராயுடலமூடிப் ... ...*
போதிநீண்மரத்தின்மேவுபுத்தர்நால்வரினும்வைத்துச் ...*
சாதிதானிலாதகொள்கைச்சௌத்திராந்திகன்முன்சாற்றும் ()

முழுதுணர்ந்துலகிற்கோறன்முதற்செயன்முனிந்துமற்றும் *
பழுதிலாவருளினாலேபரதுக்கதுக்கனாகித் ... ...*
தொழுதுவானவரும்போற்றத்தொல்பிடகங்களான ...*
வழுவிலாகமங்கள்சொன்னமாதவனாதனாவான் ... (௨)

மருவியவளவைகாட்சிமானமென்றிரண்டிவற்றுற் ...*
கருதியபொருள்கண்ஞானஞேயமாய்க்கணத்திற்பங்கம் ...*
வருமுருவருவம்வீடுவழக்கெனநான்கதாகித் ... ...*
தருமவையொன்றிரண்டாய்த்தாம்விரிந்தெட்டினாமே. (௩)

உருவியல்பூதமோடங்குபாதானரூபமாகு ... ...*
மருவியல்சித்தங்கன்மமென்றிரண்டாகும்வீட்டின் ...*
மருவியல்குற்றங்கந்தமெனவழங்கிடும்வழக்கி ... ...*
னிருவியலுள்ளதோடங்கில்லதாமியம்புங்காலே ... (௪)

மண்புனலனல்கால்பூதம்வலிகந்தமிரதவன்ன ... ...*
மெண்டருமுபாதானந்தானிவையிருநான்குங்கூடி ...*
யுண்டொருபொருளுருபமுறுபுலனுபாங்கமோடக் ...*
கண்டதுசித்தங்கன்மநன்றுதீதென்றல்காணே ... (௫)

முற்றவீடராகமாதிகுணங்களைக்குறைத்தலாகு ... ...*
மற்றவீடுருவமாதியைந்தையுமாய்த்தலாகுஞ் ... ...*
சொற்றருந்தொகைதொடர்ச்சிமிகுத்துளையென்றுமூன்று *
யுற்றிடும்வழக்கிரண்டுமொன்றுமூன்றுகியாறும் ... (௬)

ஒருவனென்றோதப்பட்டானுருவாதியைந்துங்கூடி ...*
வருபவனென்றுரைத்தறொகையுண்மைவழக்கதாகு ...*
முருவமங்காதியாயவைந்தையுமொருவனின்று ... ...*
தருவதுதொகையினின்மைவழக்கதாஞ்சாற்றுங்காலே (௭)

காரணகாரியத்தின்றொடர்ச்சியாய்க்காலமூன்றின் ...*
சோர்வறத் தோன்றுங்கெட்டு வழியென்கை தொடர்ச்சியுண்
யோர்தரினொருவனேயெக்காலத்துமுள்ளானென்று [மை
தேர்வதுதொடர்ச்சியின்மைவழக்கதாஞ்செப்புங்காலே (௮)

தோற்றியபொருள்களெல்லாநாசமாமென்றுசொல்லு ...*
மாற்றமுன்னுரைத்தன்மற்றைமிகுத்துளைவழக்கினுண்மை *
போற்றியபொருள்கண்கட்குப்போனதுபோன்முதிர்ந்து ...*
வேற்றுமைப்பட்டதென்கைமிகுத்துளையில்வழக்கே (௯)

உள்வழக்கில்வழக்குள்ளதுசார்ந்தவுள்வழக்கோ ... ...*
டுள்ளதுசார்ந்தவின்மைவழக்குடனின்மைசார்ந்த ... ...*
வுள்வழக்கின்மைசார்ந்தவில்வழக்கென்றோராறு ... ...*
முள்வழக்குணர்வுண்டென்கைமுயற்கோடின்றில்வழக்கே.( )

உணர்வுசார்ந்துணர்வுதிக்கையுள்ளதுசார்ந்தவுண்மை ...*
யுணர்வுபினின்றுமென்கையுள்ளதுசார்ந்தவின்மை ... ...*
யுணர்வுமுன்பின்றித்தோன்றலில்லதுசார்ந்தவுண்மை ...*
யுணரினல்லதுசாரின்மையுள்ளங்கையுரோமநாணே. (௰௧)

சொன்னநால் வகையுமன்றிச் சொல்லிடும்பொருள்களெல்லா
மென்னையோவறிகிலோம்பித்தேறியோர்வானமான்மா ...*
மன்னுகாலங்கடிக்குமனமொடுவாக்கிறந்திட் ... ...*
டுன்னுமோரிறையுமுண்டென்றுரைப்பதுநித்தமன்றே. (௰௨)

ஈங்குவான்செயற்குவாராதியம்பியபொருள்களெல்லாந் ...*
தாங்குவானுளதேயென்னிற்றரித்திடாதருவமாத ... ...*
லோங்குவானோசைக்காதியெனிலதங்குருவின்கூட்ட ...*
நீங்குவானின்றியெங்குநின்றதேலெங்குமின்றே. ... (௰௩)

போதமுண்டுயிர்கட்கென்னில்வாயிலும்புலனுநாலு ... *
மாய்தலின்றொட்டுத்தீட்டுக்கலப்பினிலறியுமென்னி ...*
லேதமுண்டிரவிற்பச்சைசிவப்புடனேய்ந்தபோது ...*
கேதநின்றென்னோவென்னுமையமுன்கிடத்தலாலே. (௰௪)

அறிந்திடாவாயிலின்றேலறிவின்றுமைந்தும்பற்றி ...*
யறிந்திடுமறிவுண்டென்னிலைந்தினுமறிவொன்றாக ... *
வறிந்திடவேண்டுஞ்சார்பினறிந்திடுமென்னிலுன்னை ...*
யறிந்திலோம்புத்தனென்றிங்கழகிதுசொன்னவாறே. (௰௫)

ஞானஞேயங்களன்றிஞாதுருவென்றுசொல்ல ... ...*
வானதிங்கறிவோவன்றோவன்றெனிலவனிபோலுந் ...*
தானதிங்கறிவேயென்னிற்சமைத்திடுநன்பருப்புப் ...*
போனகந்தனக்குத்தானேகறியெனப்புகன்றதாமே. (௰௬)

உயிரினைபருவதென்னினுருவுடனுற்றுநில்லா ... ...*
துயிரினையுருவதென்னிலுடலினிலுடலடங்கா ... ...*
துயிரினையணுவதென்னிலுடல்பலதுவாரமோடு ... ...*
முயிரினைநித்தமென்னிலுணர்வுதையாந்தமின்றே. ... (௰எ)

எங்குமாய்நின்றதான்மாவென்றிடினெங்குமின்றுந் ...*
தங்கிடுநிறைவுதத்தஞ்சரீரங்கடோறுமென்னின் ... ...*
ஙங்கிடுமுடலத்தோடேவடிவினிலோரிடத்தே ... ...*
யங்கதுநின்றதென்னிலடிமுடியறிவின்றாமே. ... (௰அ)

சாற்றியகாலமிங்குத்தங்கியவாறிதென்னை ... ...*
தோற்றுவித்தளித்துப்போக்குந்தொழிலிவைகாலமென்னிற் *
போற்றியபொருளிற்புக்குப்பிணங்கிடும்பொருட்பினின்றுந் *
தேற்றியவில்வழக்குத்திரவியத்தியல்பினுமே. ... (௰௯)

எனக்குநீகிழக்கிருந்தாயாகின்மேற்கென்றுயென்பா ...*
லெனக்குமேற்கிருந்தானென்பாற் கிழக்கெனவியம்புந்திக்குத்
தனக்குநாங்கொள்வதெப்பாற்சாற்றிடாயில்வழக்குத் ...*
தனக்குளதாகுமுண்மைதானிலதாகுமன்றே. ... (உ௰)

உலகினைப்படைத்தானென்றுயொருவனிங்குள்ளதாகி ...*
லுலகினைப்படைக்கவேண்டா வில்லையேற்படைக்க வொண்ணு
வுலகினுக்குபாதானந்தானுள்ளதாய்க்காரியத்தா ... *
முலகினைப்படைக்கிலங்குமுளதிலதாவதுண்டே. ... (உக)

உள்ளதுகடாதிபோலவுதிப்பித்தானென்றுரைக்கின் ...*
மெள்ளவேயெங்குநின்றுவிதித்தனனுலகின்மீது ... ...*
வள்ளருனின்றுனென்னில்வந்ததாமுலகமுன்னே ..*
தள்ளிடாதெங்குநிற்கிலெங்குமுன்றந்ததாமே. ... (உஉ)

இல்லதுகருணையாலேயியற்றினனிறைவனென்னிற் ...*
கொல்லரியுழுவைநாகங்கூற்றமுங்கொண்டுதோற்ற ...*
வல்லவன்கருணையென்னேவலியினால்வேண்டிற்றெல்லாம் *
பல்கவேபடைத்தானாயிற்பித்தனைப்பணிந்திடாயே. (௨௩)

பெறுவதிங்கென்படைத்துப்பெற்றதுவிளையாட்டென்னிற் *
சிறுமழவிறையதாகுஞ்செய்திடுங்கன்மத்தென்னி ...*
னாறுபெருங்கன்மஞ்செய்வோர்முன்புளராவருண்மை ...*
யறிவுறின்ஞாலமெல்லாமநாதியென்றறிந்திடாயே. (௨௪)

உருவொடுநின்றானென்னி லுருவமுன்படைத்தார்வேண்டு *
முருவவனிச்சையென்னி லுலகெலாமிச்சையாகு ...*
முருவுலகத்துளோர்கட்குறுவதுகன்மாலென்னி ... ...*
லுருவுடையோர்கட்கெல்லாமுற்றதுகன்மத்தாமே. (௨௫)

அருவெனிற்பவத்தினின்றுமெடுத்திடானாகாயம்போன் *
மருவினனிழல்போலென்னின் மருவினோர்க்காகுமாட்சி ...*
பெருகியவறிவுண்டென்றுபேசிடினேசத்தோடுங் ...*
கருதிடவுருவம்வேண்டுமில்லையேற்கருதலின்றே. (௨௬)

எங்கணூலநாதியாகவிறைவனுண்டென்னுமென்னி ...*
னுங்கணூலுனைப்பாரின்றியோதுவதழகிதாகு ... ...*
மங்கவன்றன்னைநூல்கொண்டறிந்தனமவனைக்கொண்டே *
யிங்குநூலறிந்தோமென்னினீதோராச்சரியமாமே. ... (௨௭)

உற்றெழுமரங்களாதியுயிரின்றிப்பூதரூபம் ... ...*
பற்றியிப்பாரின்மீதுபாங்கினாற்பலவுமாகிப் ... ...*
புற்றெழுமயிர்கொம்பாதிபோலவேதோன்றிமாயு ...*
மற்றுளயோனிகட்குப்பயனெனவழங்குமன்றே. (௨௮)

கொன்றிடலாகாதென்றுங்கொன்றவைகொண்டுநாளுந் *
தின்றிடலாகுமண்ணேடொத்திடுஞ்செத்தவெல்லா ...*
மொன்றியவாசமூட்டியுண்ணுநீர்வைத்தவர்க்கோ ...*
சென்றுநின்றுண்டவர்க்கோபுண்ணியஞ்செப்பிடாயே. (௨௯)

அழித்திடுமராகமாதியகற்றிநல்லறங்கள்பூரித் ... ...*
திழித்திடும்புலன்கள்போக்கியின்பொடுதுன்பம்வாட்டிப் *
பழித்திடாப்பழுதில்வாழ்க்கையெட்டையும்பாரித்தெல்லா *
மொழித்திடுஞானசீலசமாதியினுறுதியாமே. ... (௩௰)

ஓங்கியவுருவமோடும்வேதனைகுறிப்பினேடுந் ... ...*
தாங்குபாவனைவிஞ்ஞானந்தாமிவையைந்துங்கூடிப் ...*
பாங்கினுற்சந்தானத்திற்கெடுவதுபந்ததுக்க ... ...*
மாங்கவைபொன்றக்கேடாயழிவதுமுத்தியின்பம். (௩௧)

சௌத்திராந்திகன்மதமுற்றிற்று.

---

## சௌத்திராந்திகன்மதமறுதலை.

அனைத்தினையுமுணர்ந்தானெம்மிறைவனென்றிங் ...*
சறியாதுபுத்தநீயறைந்தாயென்று .... ...*
மனைத்தினையுமறிந்திடானளவிலாமை ... ...*
யொன்றென்றுவனைத்தினையுமறிந்தானென்னி ...*
னனைத்தினையுமளவிறந்ததென்னவேண்டா ... ...*
வளவிலாஞானத்தாலறியின்ஞான ... ...*
மனைத்தினையுமறியாதுகணத்திற்றென்றி ... ...*
யழிதலாலறிந்தனைமயின்றுகுமன்றே. ... (௧)

சிலபொருளையுணர்ந்தவற்றின்றிறத்தேயோட்டிச் ...*
 சிந்திப்பனெப்பொருளுமென்னிற்சென்று ... ...*
பலபொருளாயொன்றுபலபேதமாகிப் ... ...*
 பயின்றுவருமாதலாற்பார்க்குமாறென் ... ...*
னுலகுதனிலொருபொருளங்குணரும்போதி ... ...*
 லுற்றுணர்தலாராய்தறெளிதலுண்டாய் ... ...*
நிலவுமதனுலுணர்வுபன்மைமுன்பி ... ...*
 னின்றிடாதென்பையெல்லாநினைப்பதெங்கே. (உ)

முத்திநலங்கண்டறங்கண்மொழிந்தானுயின் ... ...*
 முதன்முழுதும்பொன்றிப்பின்மொழிந்தவண்ண ...*
மொத்திடுந்தேனெய்கூட்டியுண்டிறந்தோனொருவ ...*
 னுலகினில்வந்திதுதீதென்றுரைத்தாலொக்குஞ் ...*
செத்ததுபினென்றுரைக்கிற்கதியிற்செல்லாத் ... ...*
 தேரனுரைநீர்பெருகிச்சென்றுருகு ... ...*
மத்தினளவறியாதிக்கரையோர்தம்மை ... ...*
 யக்கரைக்கேசெல்லவிடுமாசையாமே. ... (௩)

நீர்போலநின்றுயிர்கட்களித்திடாதே ... ...*
 நெருப்பாயதுயர்ப்பிறப்பினிசழ்ந்துநின்று ... ...*
பாரோர்கட்களித்தபடிவலையிற்பட்ட ... ...*
 பலகலைமான்கண்டொருநீள்கலைபாய்ந்தோடி ...*
நேரோசென்றவ்வலைக்கேநேர்ந்தாலொக்கு ... ...*
 நீள்பாவக்குழியில்விழுநீர்மையாகு ... ...*
மாரோவிங்கவனெப்பாரறத்தையாக்கப் ... ...*
 பிறந்தறமாக்கினனென்னிலடங்கவாமே. ... (௪)

அலகிறந்தயோனிகளிற்புகுந்ததெல்லா ... ...*
மறத்தையளித்திடவென்னிலவற்றினெல்லா ...*
நிலவுவதுகன்மத்தாலாகுமன்றி ... ... ...*
நினைந்ததோரிச்சையினுனிகழ்ந்தானுகி ... ...*
னுலகுதனிலுள்ளோர்க்குமதுவேயாகு ... ...*
மொருத்திவயிற்றினிலிருந்தங்குதரந்தள்ளித் ...*
தலமதில்வந்தானென்னிற்ருயைக்கொன்ருன் ... ...*
றருமத்தையின்றெனக்குச்சாற்றிடேலே. (ரு)

அரியினெடுநெரியுழுவையாதியாக ... ... ...*
வானபோதறந்திரிந்துகோறலாதி ... ...*
பரிவினெடுஞ்செய்தனனுமில்லையாகிற் ... ...*
பசிதனக்குத்தின்பதவன்பழுதையோதான் ...*
கருதில்வன்பரதுக்கதுக்கனுகிற் ... ... ...*
கணவனிழந்தோர்கட்குங்கண்ணிகுத்தித் ... ...*
திரியுமவர்துயரினுக்குமிரங்குவோன்றன் ... ...*
செயலறத்துக்கழகியதாஞ்செப்புங்காலே. (சு)

ஒருபொருளைத்தேடியதற்குழையுந்தேடி ... ...*
யுழைப்பதன்முனுணர்விறக்குமுனக்குநூலென் ...*
மருவிவருஞ்சந்தானவழியிலென்னின் ... *
வாயுழைத்ததேயுழைத்துவழங்குமாகும் ... ...*
பெருகுவதுகெட்டென்னிலதுபோலாம்பின் ... ...*
பித்துழைத்ததறியாதுபேதைசொல்லுந் ... ...*
தருவதுநூலெப்பரிசுமுதனடுவோடிறுதி ... ...*
தான்விருத்தமின்றியதுசாற்றிடாயே. ... (எ)

முன்னாகப்பலவறங்கள்பூரித்தெம்மிறைவன் ... ...*
முழுதுணர்ந்திங்கருளினாலுயிர்கண் முத்தியடையப் *
பின்னாகப்பிடகநூலுரைத்தானென்று .... ...*
பேசினாயிவன்முன்புபேரறங்கள்புரிநூல் ...*
சொன்னாரரிவனைப்போன்முன்னொருவனென்னி ...*
லவனுக்குச்சொன்னாரானெனத்தொடர்ச்சியாகி ...*
யன்னாய்பின்னவத்தைப்படுமொருவனின்று ... ...*
மாரோவுன்பாழியிருப்பாரிதனையறையே. (அ)

இந்நூலைச்சொன்னவன்முனிங்கிருந்தானென்னி ...*
லிவனிருத்தியேத்துமவனெங்கிருந்தானெவனோ ...*
வந்நூலோகுருவந்தவடைவுமுனக்கில்லை ... ...*
யடைவுதரின்முடிவின்கணாதிபோதன் ... ...*
சொன்னாமவைவேதாகமங்களாகுஞ் ... ...*
சுருக்கியூண்டவம்புரியச்சொல்லுவதெல்லோரு ...*
முன்னூல்கண்கழுவாதேயுதிப்பதன்முன்புலாலோ ...*
டுண்பானோருன்பிரியனுரைத்ததொருநூலே. (கூ)

முன்னூலும்வழிநூலுஞ்சார்புநூலு ... ...*
மூன்றுகுமுலகத்துமொழிந்தநூல்க ... ...*
ளின்னூலினுன்னூலிங்கெந்நூலென்னி ... ...*
லிந்நூல்காணென்னூலென்றியம்பமாட்டா ...*
யுன்னூலுமொருநூலாயுரைப்பதென்னே ... ...*
யுலண்டுநூல்பருத்திநூல்சிலம்பிநூல்க ... ...*
ளன்னூலுமல்லாதபொய்நூல்கொண்டிங் ... ...*
கறநோற்றுத்திரிந்தவாறழகிதாமே. ... (ம)

புத்தன்வன் பொன்றக்கெட்டுப்போனனென்று ...*
போற்றுவதிங்காரைநீபொய்த்தவஞ்செய்புத்தா ...*
செத்தவர்க்குச்சிலகிரியைசெய்யவிங்குச் ... ...*
செய்தவர்க்குப்புண்ணியமாமென்றுசெப்பி ...*
னித்தமுயிராதலாற்பலிக்குஞ்செய்தி ... ...*
நினைந்துதருவானுமுளனுனக்கிவ்வாறில்லை ...*
வைத்தசுடர்த்தீபமறமாய்ந்தக்காலதற்கு ... ...*
மருவுதிரிநெய்கூட்டுமதிகேடுன்வழக்கே. ... (௰௪)

நூலுரைத்தானொருவனுளனென்றனுமானத்தா ...*
னூல்கொண்டிங்கறிந்தாற்போனூலானூலின் ...*
பாலுரைத்தபொருள்களெல்லாமனுமானமென்னிற் ...*
பரலோகபாதாளலோகங்களொருசொல் ... ...*
லாலுரைத்தநூலுண்டேலறையாயின்றே ... ...*
லவையறிந்தபடியெனுனதனுமானமின்றுன் ...*
மேலுரைக்கும்பிரமாணமுனக்கில்லைகாட்சி ... ...*
யனுமானம்விட்டபொருள்விளக்குவதாகமமே. (௰௫)

எப்பொருளுமநித்தமெனவியம்பிடுவையநித்த ... ...*
மில்லதற்கோவுள்ளதற்கோவுளதிலதானதற்கோ ...*
செப்பிடினில்லதற்கில்லதென்றுமில்லைச் ... ...*
சென்றடைவதுள்ளதற்கேலுள்ளதென்றுமுண்டா *
மப்படிதானுளதிலதாமப்பொருளுக்கென்னி ... ...*
னுளதிலதாகாதிலதுமுள்ளதாகா ... ...*
திப்பொருளுக்கநித்தமிலையென்றொன்றைக்காட்டா ...*
யெனிற்றேன்றும்பொருணின்றிங்கிறுதியாமே. (௰௬)

அங்குரம்வித்தின்கேட்டிற்ருேன்றுமதுபோல ... ...*
வனைத்துருவுங்கெட்டுவழியாகுமென்னி ...*
னங்கவற்றுக்காக்கக்கேடறைந்தாயெல்லா ... ...*
மநித்தமெனு மூனாமறந்தாயருகனுமானுய்நீ ...*
யிங்குமுளையிலைமரமாயெழுந்தீண்டிச்செல்லா ... ...*
திறந்ததேயெழுந்தபடியில்லாதென்னின் ...*
மங்கியிடாதேபாலதருணவிருத்ததையாய் ... ...*
வரும்வடிவுதிரிந்துநின்றுமாயுங்காணே. ... (௰௪)

உடல்பூதமெனிஞென்றுக்கொன்றுபகையொன்று ...*
வுதிரசுக்கிலமென்னின்மரத்தினுளுக்கல்லி ... ...*
னிடமாகத்தவளையுருவந்தவாறியம்பா ... ...*
யிருவினைகாணெனில்வினைகளிரண்டுருவாய்நிற்குந் ...*
திடமாகவன்னமுருவெனிலுண்ணவுண்ணச் ... ...*
சென்றுவளருங்காயந்தேயுமுணர்வென்னின் ...*
மடவோனேயருவுணர்விங்கசேதனமாயுருவாய் ...*
வளராதுவருமில்லாதெனின்மலர்வான்வருமே. (௰௫)

என்றுமிலாதொன்றின்ருய்வருமுருவம்வித்தி ... ...*
னெழுமரம்போலெனின் வித்தினுண்டாய் நின்றெழுங்கா
ணின்றதேல்வித்தின்மரங்கண்டதில்லையென்னி ...*
னெற்கமுகாய்நீளாதுநெல்லாயேநீளு ... ...*
மொன்றுமொன்றங்கிலாமையிஞலுதியாகாரணம்பெற் *
றுதிப்பதுகாரியமதுவுமுள்ளதாகு ... ...*
மன்றமதிக்கலைபோலக்கந்தமைந்து ... ... ...*
மருவியுளதெனுமுறையுமறந்தனையோவின்றே. (௰௬)

உருவமெலாம்பூதவுபாதாயசுத்தாட்டகமாய் ... ...*
வருமுருவமென்னினீயுலவத்துக்கு ... ...*
மருவுமனலோடுநீர்மண்கந்தமிரதம் ... ...*
வன்னமிலைவன்னிக்குவளிநீர்மண்வாசந் ... ...*
தருமிரதமிலைநீர்க்குத்தழல்கான்மண்கந்தந் ... ...*
தானில்லைத்தலத்தினுக்குச்சலமனல்கால்கூடி... ...*
வருவதிலையிந்திரியவிடையமான ... ... ...*
மாபூதங்களுமறியாய்மதிகெட்டாயே. ... (௰எ)

மருத்தெண்ணைதனின்மருந்துநின்றற்போல ... ...*
மறைந்தெட்டுஞ்சூக்குமமாய்மருவுமென்னிற் ... ...*
திருத்துமவன்மருத்தெண்ணைசேர்த்தாற்போலச் ... ...*
சேர்பொருள்வேறுண்டெல்லாவுருவுமெட்டும் ...*
பொருந்தியதேலொருதன்மையாம்பொருள்களொன்றின் ...*
குணமொன்றிற்புகாதறைகைபொருளறியாய்பூத ...*
வுருப்பொருள்வேறுபார்தானப்பொருள்வேறுகாட்டா ...*
யுபாதாயம்பூதகுணங்குணகுணியாமுலகே ... (௰அ)

அழிந்துணர்வையுணர்வுதருமெனினழிந்ததாக்கா ... ...*
தாமுணர்விற்பொருள்வினைகளாணையாவாறு ... ...*
மழிந்திடுவதாக்கியெனின்முன்னொருகாலத்தே ... ...*
யறிவிரண்டுமில்லாதங்கசறக்கேடின்றி ... ...*
யழிந்துணர்வையுணர்வுதருமெனினித்தாநித்த ... ...*
மடையுமுணர்வுனக்கநித்தமாயேசெல்லா ... ...*
தழிந்தெருவையாக்குவதுபோலாக்குமென்னி ... ...*
லாம்பொருள்வேறழிந்துசத்திகிடந்தாக்குமவையே.(௰௯)

கேடிலாச்சந்தானத்தேபலிக்குமென்று ... ... ...*
கிளக்கினீசந்தானநித்தமாகு ... ... ...*
மோடுநீர்போலழிந்தாமுணர்வொழுக்கமென்னி ... ...*
லொழுகுநீரிட்டதெல்லாமுடன்கழிதல்போலத் ...*
தேடுபொருள்சீலம்பாவனைகுறிவிஞ்ஞானஞ் ... ...*
சென்றவுணர்வோடேகு நின்றுணர்வினையா ... ...*
நீடுநீர்முன்னொழுகிக்கெடாதுநிறைந்தோடு ... ...*
நிகழுணர்வுங்கேடின்றிநினைந்துசெலுங்காணே. (உ௰)

சந்தானங்காரணமோகாரியமோவிரண்டின் ... ...*
றன்மையதோகாரணமுங்காரியமுநித்தம்... ...*
வந்தாருஞ்சந்தானத்தொடர்ச்சியெனினதற்கும் ...*
வருநித்தந்தோற்றக்கேடடைதலின்மற்றென்றே ...*
லந்தானகந்தங்களன்றாய்நித்த ... ...*
மடைபொருளாமறிவுமறிவடைவுமன்றிச் ...*
சிந்தாமுன்பின்னாகிப்பின்முன்னாகித் ... ...*
திரிந்துவருந்திரிவறிந்துதேராதேரோ ... (உக)

ஒருகாலத்துணர்வுகெட்டாமெனினுதிப்பீறென்று ...*
மொருபொருளின்றிரிவுனக்குக்காலமானால் ...*
வருகாலநிகழ்காலங்கழிகாலமென்று ... ...*
வழங்குவதென்பொருள்வரவுநிலைகழிவாலன்றேற் ...*
றிரிகாலஞ்செப்பிடாய்பொருட்செயலுமொன்றாஞ் ...*
செயன்மூன்றுமொருகணத்தேசேருமென்னிற் ...*
றருகாலமூன்றுகுந்தாமனாநூறிதழிற் ... ...*
றள்ளுசியுங்காலமூன்றினையுந்தருமே ... (உஉ)

உணர்வுகாரணமுணர்வுக்கெனினித்தமுணர்வுக் ...*
குண்டாகிநின்றுணர்வையுதிப்பியாதிங் ... ...*
குணர்வுசந்தானவிடத்தொழிந்தாற்பின்னை ... ...*
யுண்டாகாதுடலுணர்வுக்குபாதானமென்னி ...*
னுணர்வுடலினிடையறாதுதிக்கவேண்டு ... ...*
முடலுணர்வின்வினையினாலுணர்வுதிக்குமென்னி ...*
னுணர்வுவினைபுளதொடுங்காதுணர்வுதருஞ்செய்தி ...*
யுணர்வைவினைதரிணொருவன்செயல்வினையின்றாமே. உ௩

வினையுணர்வுதரும்வினையையுணர்வுதருமென்று ...*
விளம்பினீயுணர்வுபோல்வினையினுக்கு... ...*
நினைவுவருமொன்றையொன்றுநிகழ்த்திடாபின் ...*
னிலையின்மையாநிகழ்த்திக்கெடுதல்செய்யா ...*
கனல்விறகிற்பிறந்ததனைப்பொடிசெய்தாற்போற் ...*
கருத்தும்வினையிற்றோன்றிக்கழிக்கும்வினையென்னின் *
முனமுணர்வுபிறந்தளவேவினைகெடுக்குமுன்பி ...*
னுதியாதுமுகிணெருப்பின்விறகுதியாவாறே ... (உ௪)

பேயுநரகருஞ்சுரரும்பிரமருமாயுலகிற் ... ...*
பிதாமாதாவாதாரமொன்றுமின்றிக் ... ...*
காயமொடுதாம்வருவதொன்றுளைப்பைகாயங் ... ...*
காரியமாய்வருதலினாற்காரணமுண்டாகு ... ...*
மாயுமுணர்வோசுத்தவட்டகமோகன்மம் ... ...*
வடித்ததோவடிவுசெய்துவைத்தாருமுண்டோ ...*
வாயுமறிவுண்டாகிலறைந்திடாயுலகுக் ... ...*
காதிதனைநிமித்தகாரணமறிவதறிவே. ... (உ௫)

உருவாதிகந்தங்களைந்துங்கூடி ... ... ...*
யொருவன்வேறொருவனிலையென்றுரைக்கும்புத்தா ...*
வுருவாதியைந்தினையுமுணர்பவர்யாரொன்ன ... ...*
வுணரும்விஞ்ஞானமென்றாய்ஞானமுணர்ந்தவரா *
ருருவாதிபொருள்காட்டித்தனைக்காட்டுஞ்சுடர்போ ...*
லுணர்வுபிறிதினையுணர்த்தித்தனையுணர்த்துமென்னி *
னுருவாதிபொருளினையுஞ்சுடரினையுங்காணு ... ...*
முலோசனம்போலுணர்வுபொருளுணர்பவன்வேறுண்டே.

காயமுடனிந்திரியமனநானென்று ... ...*
கதறுவாய்காயமுறக்கத்தறியாவாகும் ... ...*
வாயில்களுமப்படியினொன்றையொன்றங்கறியா ... ...*
மனங்கணத்திற்கெடுங்காலமூன்றின்வரவறியா ...*
தாயுமுணர்வாகியுடல்பொறிமனமூன்றறிந்தங் ...*
கவைநானல்லேனென்றுமறிந்துமனத்தாலே ...*
யேயுமொருபொருள்கருதியிந்திரியப்பாலே ... ...*
யிசைவித்துக்காயத்தாலியற்றுவதான்மாவே. (உஎ)

கழிந்தவுணர்வேயின்னுமியானறிந்தேனென்று ...*
கருதலினவ்வுணர்வறிந்ததென்னின்முன்னே ...*
மொழிந்தமொழிநான்மொழிந்தேனென்றால்வாய்தான் *
மொழிந்ததோமொழிந்தவன்வேறானாற்போல ...*
வெழுந்தவுணர்வெல்லாங்கொண்டியானறிந்தேனென்ற *
தெதுவதுதானுயிருணர்வால்வாக்கான்மற்றை ...*
யொழிந்தகாயந்தன்னாலுணர்ந்துரைத்துச்செய்திங் ...*
குணர்வினுக்குமாதாரமாய்நிற்குமுயிரே, ... (உஅ)

இந்திரியவீதியெழுஞ் சித்தநெஞ்சத் ... ... ...*
தெழுஞ்சித்தமெனவிரண்டுமொன்றுகெட்டேயொன்று*
வந்தெழுவதெனிற்கனவிற்கண்டபடிநனவின் ... ...*
வாய்திறவார்நனவுகண்டபடிகனவிற்காணு ... ...*
ரந்தனுருவன்னங்களறிந்திடானன்றே ... ...*
யறிகனவுமிறந்துணர்வு மழிந்துறக்கமடைந்தா ...*
லுந்துவதோர்சந்தானமில்லையுணர்வுதிப்ப ... ...*
வுயிர்கனவுநனவிளையுமுணருங்காணே. (உக)

ஒருகாலத்தோரிடத்திலோருணர்வேற்செவிதா ...*
ஞென்றுணராதிருசெவியுமுணருமோசை ... *
யொருகாலத்திருகண்ணுமிருசெவியுமனமு ... ...*
மொருவனைக்கண்டவனுரைகேட்டுணர்ந்திடு மைம்பொறி
மொருகாலுமுணராவுள்ளுணர்வின்றிப்பொறிக ... [யு
ளொன்றென்றுவுணர்வதுவுள்ளுணர்வைந்துமுணரா *
வொருகாலும்பொறிவிகற்பித்துணராவுள்ளுணர்வுக் ...*
குள்ளதுகாண்விகற்பமிரண்டும்முணர்வதுயிரே (௬௰)

அருவுணர்வுமாயாறுமாறிமாறி ... .. ...*
யங்கங்கேதோன்றியிடிலகத்துநிலையின்றி ...*
யுருவினொடுபோலதருணவிருத்தாவத்தை ... ...*
யுண்டாகாதுறக்கத்தினுடறட்டவழைப்ப ... ...*
வருவதுணர்வெங்கிருந்துநெஞ்சிலிருந்தென்னின் ...*
வாயில்வினையறிந்தெழுப்பவாயுவறியாதாங் ...*
திரியொழியவிடிஞ்சிறெடத்தீபமெழாதடக்கஞ் ...*
சென்றபொழுதாலுணர்வுநின்றநிலைசெப்பே. (௬க)

இச்சைவெறுப்பியற்றலின்பதுன்பஞான ... ...*
மிவையணுவின்குறியாகுமிவற்றிலிச்சை ... ...*
நச்சிநுகர்ந்தொருபழத்தையினங்கண்டுமுன்பு ...*
நானுகர்ந்தகனியினினமென்றுநச்சல்பின்பு ... *
மெச்சவெறுப்பாதிகளுமிப்படியேயாகு ... ...*
மிவைமுன்பும்பின்புமுணர்ந்திடுதலாலே ...*
நிச்சயகத்தாவொருவனுளனென்றுநல்லோர் ... ...*
நிறுத்திடுவர்வெறுத்திடுவர்நின்னுடையபொருளே (௩௨)

எப்பொருட்குமிரந்தரமாயிடங்கொடுத்துநீங்கா ...*
திருள்வெளிதானன்றியிரண்டினுக்குமிடவகையா *
யொப்பில்குணஞ்சத்தமதாய்வாயுவாதி ... ...*
யுதித்தொடுங்கநிற்கும்வானுயிர்முன்னேசொன்னேஞ் *
செப்பிடுங்காலம்பொழுதுநாளாதியாகித் ... ...*
திரிவிதமாய்த்தீமைநன்மைசெய்யுந்திக்குத் ...*
தப்பில்குணக்குக்குடக்குத்தெற்குவடக்காதித் ...*
தானுகித்திரியாதேநின்றுபலந்தருமே. ... (௩௩)

காரியமாயுலகமெலாமிருத்தலாலே ... ...*
கடாதிகள்போற்காரியகத்தாவொருவன்வேண்டு *
மாரியமாயறம்பொருளோடின்பம்வீடெல்லா ... ...*
மறைந்துயிர்கட்கறிவுசெயலளிப்பதுநூலந்நூல் *
கூரியராயுள்ளவர்களோதவோதிக் ... ... ...*
கொண்டுவரலான்முன்னேகுற்றமின்றிச் ...*
சீரியபேரறிவுடையோன்செப்பவேண்டுஞ் ... ...*
செயலினுக்குங்கரிவேண்டுஞ்சிவனுளனென்றறியே (௩௪)

மரங்களுயிரல்லவென்றுமறுத்துச்சொன்னாய் ... ...*
வாடுதல்பூரித்தலான்மரங்களுயிராகுந் ... ...*
திரங்குநீர்பெருதொழியிற்பெறிற்சிரத்தைசேருஞ்  ...*
சீவனலவெனிலுலகிற்சீவனெல்லா ... ...*
முரங்சொள்வதூண்பெறிற்சோருமூண்பெருவே ...*
லுலர்ந்தமரநீர்பெற்றுலுய்யாதுள்ளுயிர்கள் ...*
கரந்தசினைமுட்டைகட்குவாயிலின்றுவாயில் ... ...*
கண்டிலதேற்பூத்துக்காய்த்தெழலான்மரங்களுயிரே. ()

ஒருமரத்தினுயிரொன்றேற்சொம்பொசித்துநட்டா ...*
லுய்யுமுயிரொன்றுபலவாமோவென்னிற் ... ...*
கருமரத்தின்வித்துவேர்கொம்புகொடிகிழங்கு ... ...*
கண்சலந்துகொள்ளுமுயிரண்டம்வேர்ப்புத் ...*
தருபிறப்புச்சராயுசங்கள்சனனமும்பெற்றுற்போற் ... ...*
றுனடக்குமுற்பீசந்தலநடவாதென்னிற் ...*
பெருநிலத்திற்காலிலார்நடப்பரோபேதாய் ... ...*
பிறப்பின்விதமநேகங்காண்பேசுங்காலே. (௩௬)

தின்னுமதுகுற்றமிலைச்செத்ததெனும்புத்தா ... ...*
தின்மையெனக்கொன்றுனக்குத்தீற்றினர்க்குப்பாவ *
மன்னுவதுன்காரணத்தாற்றின்றுதார்க்கு ... ...*
வதைத்தொன்றையிடாமையினுல் வதைத்தவர்க்கேபாவ
மென்னிலுனையூட்டினர்க்குப்பாவஞ்சேர ... ...*
வென்னதவம்புரிகின்றாய்புலால்கடவுட்கிடாயோ *
வுன்னுடலமசுசியெனநாணிவேறே ... ...*
றுடலுண்ணினசுசியெனவுணர்ந்திலைகாணீயே. (௩௭)

குடைநிழலுங்கண்ணாடிச்சாயையும்போற் பிறப்புக் *
கொள்ளுமுணர்வென்னிற்காரணமழியவழியு ...*
மடைநிழலுங்கந்தமைந்துமழியுமுனக்கிங்கே ...*
யவையழிந்தாலருங்கதியினணையுமுணர்வின்று *
மிடைகனவினெழுமுணர்வுநனவுணர்வானுற்போ ...*
லெழுமுணர்வுகன்மத்தானினைந்துகதியென்னின் *
மிடைசினையுமந்தனுமுட்டையுமுயிர்விட்டக்கான் ...*
மேவுவதெப்பிறப்பினுடல்விடாதுகன்மவுணர்வே. (௩௮)

ஐந்துகந்தஞ்சந்தானத்தழிதல்பந்ததுக்க ... ...*
மறக்கெடுகைமுத்தியின்பமென்றறைந்தாய்கந்த *
மைந்துமழிந்தான்முத்தியணைபவர்யாரென்ன ... ...*
வணைபவர்வேறில்லையென்றுயார்க்குமுத்தியின்ப *
மைந்தினுணர்வினுக்கென்னிலழியாதவ்வுணர்வுண் ...*
டாகவேயெவ்விடத்துமுருவாதிகந்த ... ...*
மைந்துமுளவாமதுவும்பந்தமாகி ... ...*
யரந்தைதருமுத்தியின்பமறிந்திலைகாணீயே. (௩௯)

அநாதிமுத்தனாய்ப்பரனாயசலனாயெல்லா ... ...*
வறிவுதொழிலனுக்கிரகமுடையவரன்கன்ம ...*
நுஞ்சிகமற்றெருத்தவிடத்தேசத்திநிபாத ... ...*
நுழைவித்துமலங்களெலாநுங்கநோக்கி ... ...*
மனாதிகரணங்களெலாமடக்கித்தன்னை ... ...*
வழிபடுநல்லறிவருளிமாக்கருணைக்கையா ...*
லினாதுபிறப்பினின்றுமெடுத்துமாரு ... ...*
வின்பமுத்திக்கேவைப்பனெங்கண்முத்தியிதுவே. (௪௰)

சௌத்திராந்திகன்மதமறுத்தலை முற்றிற்று.

## யோகாசாரன்மதம்

போதமேபொருளாய்த்தோன்றும்பொருளதாயெழலாற்போ
வாதனையதனுற்கூடி வருதலால்வடிவிலாமை... ... [தம்
யாதலாற்கனவுபோலுஞ் சகமுளதறிவேயாமென்... ...*
ருதிஞனேதானுய வுணர்விஞலியோகாசாரன் ... (௧)

யோகாசாரன்மதமுற்றிற்று.

---

## யோகாசாரன்மதமறுதலை.

போதமுந்தவிரவேருர் வாதனைபுகன்ருய்போதம் ...*
வாதனையிரண்டுண்டென்னுய்போதம்வாதனையுமென்னிற் ...*
காதலாற்பொருளினேடு கலந்துபின்னெழுங்கருத்தாம் ...*
வாதனைகனவுகண்ட பொருளின்மேல்வருங்கருத்தே ... (௧)

அறிவதேபொருளதாகி லகங்கடமென்னவேண்டும் ...*
பிறிபொருளாகும்பேதித்திதம்பிரபஞ்சமென்ற... ...*
லுறுபொருளுருவந்தோய்ந்தாலுணர்வுமவ்வுருவாய்நிற்குஞ் *
செறிபொருளதுவாய்நிற்குந் தெளிபளிங்கதுவேபோல...(௨)

யோகாசாரன்மதமறுதலைமுற்றிற்று.

---

## மாத்திமீகன்மதம்.

அவையவம்பொருளாய்த்தோன்றுமவையவமழிந்தாற்பின்னை
யிவைபொருளென்னவேருென் றிலாமையாற்பொருள்களின்
மவைபொருளிலாமையாலே யறிவுமின்ருகுமென்று ... [ரு
நவைதருமொழியினுலே நவிலுமாத்திமிகன்ருனே ...

மாத்திமீகன்மதமுற்றிற்று.

## மாத்திமீகன்மதமறுதலை.

கடத்தினிலவையவங்கள்படத்தினிற்புகாமற்காத்தும் ...*
படத்தினிலவையவங்கள் கடத்தினிற்புகாமற்கொண்டு ...*
மிடத்தினினிற்குமாகுமவையவியிரண்டுங்கூடி... [டே
யுடைத்தொருபொருளுண்டாகப்பொருளுமுண்டுணர்வுமுன்
னி
கருவியுமொழியும்வேறு கருதிடுங்கருத்துநிற்கப் ... ...*
மொருள்புணராமையாலே போதம்வந்தெழுவதின்று ...*
மருவிடும்பொருளுண்டாக வந்தெழும்புந்தியானுற் ...*
பொருளுளதாகுமாகப் போதமுமுள்ளதாமே... ... (உ)

மாத்திமீகன்மதமறுதலை முற்றிற்று.

---

## வைபாடிகன்மதம்.

அரிசனநூறுகூடவருணம்வந்தெழுந்தாற்போல ...*
விரிசகம்பொருள்கண்ஞானம்விரவிடமேவித்தோன்றுந் *
தெரிசனமிதுவேயென்றுதெளிந்திடுந்தேரர்வீடு ...*
பரிவொடுமடைவொன்றுபகரும்வைபாடிகன்றான். (க)

வைபாடிகன்மதமுற்றிற்று.

---

## வைபாடிகன் மதமறுதலை.

பொருளதுபுறம்பதாகும்போதமந்தரமதாகுந் ... ...*
தெருளிடினிரண்டுஞ்சென்றுசேர்ந்திடுமாறதின்று ...*
மருவுணர்வுருவஞேயமாதலினுலுங்கூடா ... ...*
...ருணர்வுடையவைபாடிகற்கினிமாற்றமின்றே. (க)

வைபாடிகன்மதமறுதலை முற்றிற்று.

## அமணரில் நிகண்டவாதிமதம்.

வாசமாமலரசோகுபேணிமறைநீதியோடுமலையுந்தவத் [ற்
தாசையாயுடையகன்றுமாசினையடைந்தில் வாழ்தருமறத்தினி
பாசமானதுதவிர்ந்துபண்டிபடவுண்டுபோயினொடுபீலிமே *
னேசமாயவைதரித்துளோர்களினிகண்டவாதியைநிகழ்த்து
வோம். ... ... ... ... (க)

ஈறிலாதனவநந்தஞானமுதலெண்குணங்களெனுமொண்குண
மாறிலாதமதிமேவுசிதமெனமன்னிவானவர்வணங்கவே *
வேறுலாவுகுணஞானமாவரணியாதியெட்டினையும்விட்டசீ *
ரோறுபான்மை யுடனீடுவாழருக னெங்களுக்கிறைவ னென்ற
னன். ... ... ... ... (உ)

கருவிகண்படுதுடக்கொழிந்துவருகாலமூன்றுநிகழ்காரியம் *
பெருகநின்றொரு கணத்திலேபுணர் பெருந்தவக்கடவுள் பீடி
னுன் - மருவிநின்றுவழி பட்டவர்க்குமலை வுற்றவர்க்குமன
மொத்திடுங் - குருசிலெங்களிறை யென்றுபின்னுநிகழ் குற்ற
மின்மையது கூறுவான். ... ... ... (௩)

பசித்தருசபயச்செற்றமோடுவகை மோகசிந்தனைப்பிறித்தனேப்-
நசித்தல் வேர்வினொடு கேதமோடுமதம் வேண்ட லீண்டதி
சயித்தலும் - புசிப்புவந்திடு பிறப்புறக்கமவை விட்டோரட்ட
குணபூதனுய்-வசித்தவன்னுலகின் மேலிருந்தொருசொலிகல
னுக்கருளு மென்றனன். ... ... ... ... (௪)

அந்தவாய்மொழியினலவன்சரணமாதியோகமுதலான நூ *
லிந்தமானிலமயங்கிடாதவகையிங்கியப்பினனிதன்பொருள் *
வந்தகாலமுயிர்தன்மதன்மியறமற்றும்விண்மருவுபுற்கலம்
பந்தம்வீடினோடாதியாயிவை படைப்பதின்றியுள பத்து

நிற்றலோடுதலைபோதலன்மையைநிகழ்த்துநீடுவெதிரோகமு. *
முற்றதாமிவைகணத்திலேமருவியுள்ளவாபிரியுமாறுதான்...*
கற்றகாலமளவெய்திவாழுமுயிர்காயமேவிநிறைவானதே ...*
பெற்றுவேறுவருதன்மைநேரறிவுபெற்றதாகியுளபேசிலே. ()

பரந்துமீதுதருமாத்திகாயமழிவித்தநித்தமதுபண்ணிடு ...*
நிரந்துகீழதருமாத்திகாயமதுநித்தமாமிகநிறுத்திடும் ...*
புரந்தபுண்ணியமதற்குநன்மைபுகல்பாவமானவதுதீமையே.*
தரும்பொருட்கிடமதாகும்வானமிகு புற்கலன்களவைசாற்று
வாம்... ... ... ... ... (எ)

ஏணுமொன்றுடையவாகியெங்குமணுவாயிரும்புகன்மரங்களும் - பூணுமங்குருவெலாமுமாகுமிவை புற்கலப்பொருள்களென்னலாங் - காணுமங்கறுவகைத்தொழிற்களவைகட்டுவிட்டநெறிகன்மமேன் - மாணநின்றுவருமாறிமாறிமுன்வகைந்ததுண்டுவிடமாட்சியே... ... ... (அ)

நிகண்டவாதிமத முற்றிற்று.

—o—

## நிகண்டவாதிமதமறுதலை.

அருகனுக்கனந்தஞானமாதியாதியாகவே ... ...*
பெருகநிற்றல்சீதமாமதிக்கடைந்தபெற்றியே ... ...*
லொருவுமிட்டவொப்பவனுயிர்த்திறத்தினுள்ளபின் ...*
மருவுமிக்ககுற்றமேலறத்தின்மன்னிஞனெனில்... (க)

அறத்தினமன்னுவித்தவன்ஞெருத்தனுயவனறத் ... ...*
திறத்தினிற்றன்மற்றெருத்தனுல்விளைந்தசெய்தியா ... ...*
மறத்தினற்றவர்க்கெலாம்வணக்கமுன்னிறைக்குமேற் ...*
...க்குமிங்கவத்தைகொண்டதாயின்றுபேசிடே ... (உ)

கருவிகண்டெக்கொழிந்துகண்டுவாழுமென்றியே... ...*
லுருவுகொண்டுநின்றதென்னிலுண்டுதான்மனுதிக... ...*
ளொருவிநின்றதென்னிலத்தமொன்றையுமுணர்ந்திடான்...*
பொருடெரிந்துபோகைகாலமொன்றிலேபுணர்ந்திடான். (௩)

ஆர்வகோபமானவையடைந்தொறுப்பவர்க்கெலாஞ்... ...*
சேர்வதின்மைசெப்பிலின்றுசீவனேகுகாயமா ... ...*
மோருமன்னர்போல்வேயுயிர்க்களித்தலின்றியே ... ...*
யேர்கொள்பொன்னெயிலிடத்திருத்தல்பெற்றதென்கொலோ

சொல்லதொன்றுகொண்டிசலிறுதனுடவேசொலி ...*
னில்லையாமனுதிதானியம்புமாறதெங்ஙனே ... ...*
நல்லவாமனுதிதானவர்க்குநாடவேயிலை ... ...*
யொல்லையுமருமருக்குரைத்தவாறதொக்குமே. ... (௫)

இன்பபூமி[illegible]கலினுதனிவ்விருநிலத் ... ...*
துன்பமங்குணர்ந்திடாமையிங்கறிந்துசொல்லிடா ...*
னின்பபூமியில்லிருந்திருந்தியாவுமெய்திடிற் ... ...*
றுன்பபூமியாமுணர்ந்துசொல்லவல்லதில்லையே. (௬)

நிறைந்துகாயமோடுசீவனின்றதாகிலிவ்வுடல் ... ...*
குறைந்தபோதுதானுமித்தோடொக்கவேகுறைந்திடு ...*
மிறந்துபோகுமிக்கடம்பிறந்தபோதுநீர்க்குடத்
துறைந்திடைந்திடக்குடமுலர்ந்தவாறதொக்குமே. (௭)

கண்டநூறருந்தன்மாத்திகாயமோடதன்மமு ... ...*
முண்டுமீதுகீழுலாவியுற்றுநின்றிடப்பொருள் ...*
கொண்டதென்னிலத்தமிவ்விரண்டுதன்மைகூடிடா ...*
வண்டுபுட்கள்போலெவ்னின்வழங்கிடாகணத்திலே. (௮)

நீடுபாவபுண்ணியங்களானிாயவானசங் .... ...*
கூடுவார்களின்றுநின்றுகூட்டுவார்களின்மையி ...*
ஞேடுமோகணைத்திறத்தினுற்றவாறுரைத்தியேல் ... ...*
வீடுமோகணைக்குநாடும்வில்லிபோலவேண்டுமே. ... (௯)

ஏணதொன்றுபுற்கலத்தினெய்துமென்னினுசமே ...*
காணலாகுமக்கடங்கழிந்ததன்மையில்லவை ... *
பூணவேண்டுநா லுறும் பொருத்தமின்மையொன்றினின் ...*
மாணவேயணுப்பொருணிகண்டவாதிவைத்ததே. ... (௰)

ஆறுகாரியங்கண்மாறவேதயங்களாமெனின் ... ...*
மாறிவாணிபஞ்செயாதிருக்கவந்திடாதன ... ...*
மீறிலாதவூழதென்னினெங்குமுள்ளதூழதே ... .. *
பேறுகாரியம்விடப்பிறப்பதில்லைபேசிலே. ... (௰௧)

உடல்வருந்தமாதவங்களூறுதியென்றுரைத்திடிற் *
படவருந்துநோயினோர்கள்பட்டர்வர்பொன்னெமிலனுய் *
திடம்வருந்தவின்பமிச்சைசெய்தல்செய்தல்செய்தியேற் . *
கெடவரிந்திடாயுஞ்சிகேடிவின்பமுன்னியே. ... (௰௨)

பூர்வகன்மமற்றிடப் புசித்தபின்புபொன்னெமி ... ...*
னேர்வதென்னின்க்கன்மத்து நிச்சயமிலாமையிற் ... ...*
நீர்வதின்மைதீரின்வரயில் சேர்வதின்மைதெண்கட ...*
னீர்வறந்தபோதுபூனை மீனருந்தநின்றதே. ... (௰௩)

கூறுகூவன்மன்னுமக் குடங்குறித்துநீள்கனை ... ...*
யேறலுற்றதன்மைநீ யொருத்தரின்றியேறுதல் ... ...*
வேறொருத்தனக்கடத்தை மீதுநின்றெடுக்கவே ... ...*
யேறலுற்றதன்மையிற் சிவன்திறத்தினின்றிடே ... (௰௪)

நிகண்டவாதிமத மறுதலை முற்றிற்று.

## ஆசீவகன்மதம்

என்னுயிரதற்குப்போல வெவர்க்குமொத்திருப்பனென்று ...*
தன்னுயிர்வருந்தத்தானுந் தலையினைப்பறித்துப்பார்மேன் ...*
மன்னுயிரெவற்றினுக்கும் வருந்தவேயறங்கள்சொல்லு ...*
மன்னதோர்வாய்மையாசீ வகனமணர்களிற்கூறும். ... (௧)

வரம்பிலாவறிவஞ்தி வைத்தநூற்பொருள்கடாமு ... ...*
நிரம்பவேயணுக்களைந்து நிலம்புனலனல்கால்சீவன் ... ...*
பரந்திவைநின்றபான்மை பாரதுகடினஞ்சீதந் ... ...*
தரும்புனல்சுடுந்தீவாயுச் சலித்திடுமுயிர்போதத்தாம். (௨)

பார்புனல்பரக்குங்கீழ்மேல் படர்ந்திடுந்தேயுவாயுச் ... ...*
சேர்வதுவிலங்கியுள்ள மவற்றொடுசேரும்வேறு ... ...*
சார்வதுபெற்றபோது சாந்தவப்பொருளின்றன்மை ...*
நேர்வதுமதுநிற்கு மிதுபொருணிகழ்த்துமாறே. ... (௩)

உணர்தராவணுக்கணுலு மொன்றுகெட்டொன்றதாகர் ...*
புணர்தராவொன்றிற்புக்கொன் றாயினும்பொருந்திவாழு ...*
மணைதராபுதியவந்திங் கழிதராபழையவான ... ...*
விணைதராவொன்றொன்றாகி மாறுதலொன்றுமின்றே. (௪)

கொண்டுமுன்விரித்தனீட்டல் குறுக்குதல்குவித்தலூன்ற ...*
லுண்டுதின்றுதிர்த்தன்மீட்ட லுடைத்திடலொன்றுமொண்ணு
விண்டுபின்புறம்பும்போகும் வேறுநின்றுள்ளுமேவும் ...*
பண்டுமின்றென்றுமெங்கும் பரந்தொருதன்மைப்பாலே. (௫)

கண்ணினிற்காணவொண்ணுச் சனித்தந்தக்கன்மத்தாலே ...*
நண்ணிடுமுருக்களாகி நின்றபின்னரோகாண்பார் ...*
விண்ணினிற்றேவர்சாண்பரோரணுமிக்கநான்கர் ... ...*
யெண்ணியபொருள்களெல்லா மிசைவதென்றியம்புமின்னே

ஒன்றினையொருவிமூன்றங் குற்றிடாவிரண்டுவிட்டு ... ...*
மின்றிடாவிரண்டுங்கூடு நெறிநிலநான்குநீர்மூன் ... ...*
றின்றிரண்டழல்காலொன்று மிசைந்திடும்பூமியிவ்வா ...*
றென்றுநீர்தீகாலாதியீண்டுவதென்றியம்பும் ... ... (௭)

வெண்மைநன்பொன்மைசெம்மை கழிவெண்மைநீலம்பச்சை
யுண்மையிவ்வாறினுள்ளுங் கழிவெண்மையோங்குவீட்டின் *
வண்மையதாகச்சேரு மற்றிவையுருவம்பற்றி ... ...*
யுண்மையிவ்வொட்டுத்தீட்டுக் கலப்பினிலுணருமென்றான் ()

பேறிழவிடையூறின்பம் பிரிவிலாதிருக்கைமற்றும் ... ...*
வேறொருநாட்டிற்சேறல் விளைந்திடுமூப்புச்சாதல்... ...*
கூறியவெட்டுமுன்னேகருவினுட்கொண்டதாகுங் ... ...*
தேறியவூழிற்பட்டுச் செல்வதிவ்வுலகமென்றான்... ... (௯)

புண்ணியபாவமென்னு மிரண்டணுப்பொருந்தவத்தே ...*
யெண்ணியவிவற்றினோடு மேழெனவெங்களோடே ...*
நண்ணியவொருவன்கூறு ஞானமிவ்வாறதென்று ... ...*
கண்ணியகருத்தினோர்கள் கதியினைக்காண்பரொன்றான் ... (௰)

ஆசீவகன்மதமுற்றிற்று.

---o---

## ஆசீவகன்மதமறுதலை.

வாராநெறிவீடானபின்மண்மேலவன்வந்து ... ...*
தாரார்மையினாலானதுதானேவுளதின்றாஞ் ... ...*
சேராமையிலணுவானவையைந்தும்மொருதேசத்... ...*
தோரானொருகாலத்தினிலொன்றாமுணர்வின்றாம் ... (௧)

இருபான்மையரிவர்மண்டலர்செம்போதகவொன்றே ... ...*
வருபான்மையரிவர்மண்டலர்மண்மேல்வருநாலுந் ... ...*
தருபான்மையவொனினீதலமதில்வாழ்பவர்தம்போ... ...*
லொருபான்மையினுளராகுவருணமாதுசைசெய்தாய் ... (உ)

உயிரானவையுடனீண்டிடலொட்டுக்கலப்பெய்தும் ... ...*
புயில்வாலுணர்வெய்தும்மெனுமொழியானதுபழுதாந் ...*
துயிலர்தருமவர்பாலகர்தொடராரறிவினைநீ ... ...*
செயிரார்தருமுனாயேதருமிதுவோவுனசெயலே... ... (௩)

அணுவானவைகீழ்மேலுளவாஞலவயவமுன் ... ...*
னணுகாவெனலாமோவரிஞசம்மவையெய்து ... ...*
மணுகாவெனிலவைதொள்ளைகொளாகம்முளவாகுந் ... ...*
துணிவாலினைலவாபலதொகையாம்வகையிலவாம் ... (௪)

மிகையாமணுவுளவாகையினவையாமிகவென்னிற் ... ...*
ருெகைநாலிடையறலாலவைதொகுமாறிலவாகும் ... ...*
பகையாமவையின்மிசைதாழ்வினைநிலையாவகைபண்ணு ...*
நகையாமுமைகழியாயிரமவைதுணெனநண்ணு ... ... (௫)

கூடாவணுவறியாமையின்வளிகூட்டுதல்கூறி ... ...*
ஞடாவளியணுவானவைநணுகச்செயுமவனை ... ...*
நீடாவினைதன்ஞலெனினினைவின்றதுவின்றுந் ... ...*
தேடாயொருவனைநீயிவைசெய்வானுளனென்றே... ... (௬)

ஆசீவகன்மதமறுதலை முற்றிற்று.

## பட்டாசாரியன்மதம்.

வேதமேயோதிநாதனில்லையென்றுவிண்ணிலேறச் ... ...*
சேதமாங்கன்மஞ்செய்யச்செயமுனிசெப்புநூலி ... ...*
னீதியேகொண்டுபட்டாசாரியனிகழ்த்துநீர்மை... ...*
யோதநீர்ஞாலத்துள்ளேயுள்ளவாறுரைக்கலுற்றாம் ... (௧)

உற்றிடுங்காமமாதிகுணங்கடாமுயிர்கட்குண்டா ... ...*
மற்றிவைதருமேயாயின்மறைமொழிவாய்மையின்றாங் ...*
கற்றிடுநூலாற்போதங்கலப்பதுகல்வியின்றேற்... ...*
பெற்றிடுமழவுமூங்குமென்னவேபேசலாமே... ...(௨)

உண்டொருகடவுள்வேதமுரைத்திடவுயிரின்றன்மை ...*
கொண்டவனல்லனென்றுகூறிடினுருவங்கூடிற் ... ...*
பண்டையவுயிரோயாகும்படித்தநூலளவுஞானங் ... ...*
கண்டிடுமுருவமின்றேற்கருதுவதில்லையென்றான்... ... (௩)

தேவருமுனிவர்தாமுஞ்சித்தருநரருமற்று ... ...*
மியாவருமுரைப்பர்வேதமியற்றினரின்னரொன்னப் ... ...*
போவதொன்றன்றுநாளும்பரம்பரைபுகல்வதாகுங் ... ...*
கூவலிங்கென்னிற்கொள்ளோமறுமையைக்குறித்தலாலே (௪)

உன்னியவங்கமாறுமூன்றுபவேதந்தானுந் ... ...*
தன்னுளேயடக்கிவேறுதங்கிடாவகையைச்சார்ந்து ... ...*
முன்னமோர்தோற்றமின்றிமுடிவின்றிநித்தமாகி ... ...*
மன்னியோரியல்பேயாகிவழங்கிடுமறையதென்றான் ... (௫)

செய்தியுநெறியுமேவுந் தேவரும்பொருளுமெல்லா ... ...*
மெய்தியபன்மையாலே யோரியல்பியம்பாதாகு ... ...*
மையமில்காலமூன்று மறிந்தபின்னெஞ்சகத்தாய் .... ...*
மெய்யதாய்வந்துதோன்றும் விளம்பிடில்வேதநூலே... (௬)

தப்பிலாவாகுந்தாதுப் பிரத்தியந்தன்னினேடே ... ...*
யொப்பிலாதாம்பிராதி பதிகமாமுறுப்புங்கொண்டு ... ...*
செப்புமாம்வேதஞ்சொன்னவிதிப்படிசெய்யச்சேம ... ...*
வைப்பதாம்வீடுபாசமருவலாமொருவலாலே ... ... ௭

போக்கொடுவரவுகாலமொன்றினிற்புணர்வதின்றி ... ...*
யாக்கவேறெருருவரின்றி யநாதியாயணுக்களாகி ... ...*
நீக்கிடாவினையிற்கூடி நிலமுதலாகநீடி ... ... ...*
யூக்கமாருலகமென்று முள்ளதென்றுரைக்கலாமே ... (௮)

நித்தமாயெங்குமுண்டாய் நீடுயிரறிவுதானும்ப் ... ...*
புத்திதானுதியாய கருவியின்புறத்ததாகிச் ... ... ...*
சுத்தமாயருவமாகித் தொல்லைவல்வினையின்றன்மைக் ...*
கொத்ததோருருவம்பற்றிப் புலன்வழியுணர்ந்துநிற்கும்...(௯)

செயறரும்வினைகண்மாய்ந்து சிந்தையிற்சேர்ந்துநின்று ...*
பயனெடும்பலியாநிற்கும் பலாலமுந்தழையுமெல்லாம் ...*
வயறனின்மருவிநாசம் வந்தபின்பலத்தைவந்திங் ... ...*
கியல்பொடுந்தந்தாற்போல வென்றும்பினியம்புகின்றான் (௰)

நீதியானித்தநன்ம நிகழ்த்திடச்சுபத்தைநீங்கார் ... ...*
தீதிலாவிச்சாகன்மஞ் செந்தழலோம்பிச்செய்ய ... ...*
வேதுநான்வேண்டிற்றெல்லா மெய்தலாஞ்சோமயாக ...*
மாதிதானசைவீசியமைத்திடவீடதாமே... ... (௰௧)

கருதியகன்மஞானமிரண்டுங்காலாகக்கொண்டு ... ...*
மருவிடலாகும்வீடுமெதியினைமதித்துச்செய்தி ... ...*
யொருவிடிற்பதிதனாகும் பதிதனைக்கதியிலுய்க்கத்... ...*
தருவதோர்நெறிதானில்லை யென்னவுஞ்சாற்றினனே... (௰௨)

பசுப்பமைத்தியாகம்பண்ணப் புண்ணியமாவதென்று... ...*
வசிப்பினுன்மறைகள்சொன்ன வழக்கினுல்வாய்மையாக ...*
நசிப்பிலாமந்திரங்க ணவிற்றலினின்பமாகும் ... ...*
பசிப்புளாஞெருவனுண்ணப் பசியதுதீர்ந்தபண்பே ... (மரு)

பட்டாசாரியன்மதமூற்றிற்று.

———o———

## பட்டாசாரியன்மதமறுதலை.

வேதஞ்சுயம்புவெனவேதந்தவாய்மொழியில்வேறும்பிரமாணமுளதே - னீதந்துகாணிங்குமாதுங்கபாரதமுனேர்கண்டதாகுமதுபோ - லோதுஞ்சொலாய்வருதலானுங்கடாதிபடமோவந்திடாவொருவரா - லேதந்ததாமறைகளாய்வந்தவாய்மொழியும்வேறிந்துசேகரனதே... ... ... ... ... (க)

உரைதந்திடாஞெருவனெனிலிந்தவானினிடை யொலிகொண்டுமேவியுளதாம் - புரைதந்தமாமறைகளபிவெஞ்சமாயொளிர்கைபொருடந்ததீபமதுவேல் - உரைதந்ததாலிவுரைகபிலன்சொலாகுமதுமறைகின்றவாறும்வரவும் - விரைவின்சொலாயிதனையெவைகொண்டுமேவுவது விடைகொண்டதாலுனாயே... ... ... ... ... ...(உ)

உருவின்கணேமருவிவரிலின்றுதேரையுரைதுளதுங்கணூலின்மறையுர் - தருகின்றநாதரவரிவரொன்றுநாமமது தரவந்திடாமையதனுல் - வருமென்றுநீடியெனில்வளர்கின்றதீபதனில் வருகின்றவாடைபலவா - லொருதந்துவாயனவனிவனென்றபோதிலிவையுளதென்றுநேடியவையே ... ... ... (ஈ)

மறைநின்றுநாலுதிசையவரொன்றதாகவரு முறாதந்த வாய்மையதனு - னிறைவென்றுநீடுமெனில்வயுங்கடாதிபல சொலவொன்றிநீடியுளதாங் - குறைவின்றிநாடுமொழியவை சென்றுகூடுவதோர் குணமுண்டதாகுமலர்தா - னுறைகின்ற மாலைதனிலுளதன்றதாகுமெனி லுணர்வின்றதாழியொலியே.

உடனின்றுநாமுணருமதுகண்டவாறுருவ னுலகங்களே யுருவமா - யிடநின்றுமாமறைகளவையன்றுவாய்மொழிய வி வைகொண்டுலோகநெறியின் - கடனின்றுவாழுமதுகருதும்பி னுணைவழி கருமஞ்செய்காசினியுளோர் - திடமென்றுசீரரச னுரைதங்குமோலைதிரு முகமென்றுகூடுசெயலே ... ... (ரு)

முடிவின்றிவேதியர்கண்முதல்வந்தமூவர்களு மொழியு ஞ்சொலாரியமெனிற் - கடிவின்றியேகணிதரவர்கொண்டவா றதுவென்வடகண்டசாதிகடியா - தொடிவின்றியோதுவதெ னுனாதங்குவேதமொழி யுளதென்றுகூறுமவர்தா - மடியின்று தானெனுமதறிவின்றியீனுமவ ரிலையென்றவாதரவதே... (சு)

அறிகின்றபான்மையவையவநின்றதாகினனு வழியுங்க டாதியெனவே - செறிகின்றவாறதிலையெனில்வந்துசேருமது திடமன்றுகூடவொருவன் - குறிகொண்டுகாரின்முளைவருகி ன்றபீசமவை கொலைவொன்றிவேனிலழியு - முறுகின்றகால மவையுடனின்றுபோயழியு முலகென்றுநீடியிலதே ... (எ)

நிறைவெங்குமாகிலுயிர்நெறிநின்றுபோய்வருத லிணைவி ன்றதாமுடலிலே - குறைவின்றெலாமுமுளகுடகந்தமாகில வைவிட்டின்றவாறுகுறியா - வுறைநின்றமாதவர்களுடனின் றுபோய்வறிதோ ருடல்கொண்டுமீள்வதுணராய் - மறைதந்த வாய்மையதினிறைவின்றியேயுலகின்மலைகின்றதாலுனாயே.

கழிகின்றதால்வினைகளாகின்றவாறெனொரு வதுமங்கி
யானபரிசே - லொழிவின்றியோதனமுமறவுண்ணநாம்வினைக
ளுறுகின்றவாறதெனலாங் - கழிகின்றதாலறிவுவினைதந்திடா
வினைஞர் கருமங்கணுடியுரவோர் - பழுதின்றியேயுதவுமதுப
ண்பதாகவருள்பரமன்கணுகும்வினையே... ... ... (௯)

கருமங்கண்ஞானமதுவுடனின்றலொன்மருவு கதிதங்கலா
வதெனினீ - தருமங்கராகமுதலவைதங்குமேலறிவு தவிரும்பி
ன்வீடுமெணையார் - பொருணின்றுதேடிவருபயனுண்டுபோகவி
னைபுரிகின்றவாறதெனவே - திருநின்றபோகம்வளரவிசென்று
மேவியதுசெலவுண்டுசூழ்வசெயலே... ... ... ... (௰)

பட்டாசாரியன்மதமறுதலை முற்றிற்று.

———o———

## பிரபாகரன்மதம்.

அருந்தவனுஞ்செயமுனிபண்டாரண நூலாய்ந்தானுய்த் ...*
திருந்துமுலகினிற்கொண்டுசெப்பிய நூற்றிறமதனைப்.. ...*
பரிந்துபிரபாகரன்பட்டாசானில்வேறாகிப் ... ... ...*
புரிந்துரைசெய்நெறியதனைப்புவனிமிசைப்புகன்றிடுவாம் (௧)

அருஞ்செயலினபாவத்தேபூர்வமெனுமதுதோன்றித் ... ...*
தருஞ்செயனின்றழியிற்றன்பலிப்பிப்பதாகுமது ... ...*
வருஞ்செயலொன்றின்றியேமண்சிலைபோலாமுத்தி ... ...*
தருஞ்செயலீதெனவுணர்ந்துதாரணிமேலவன்சாற்றும்... (௨)

பிரபாகரன்மதமுற்றிற்று.

———o———

## பிரபாகரன்மதமறுதலை.

வேறுபலன்றருவதுதான் வினையென்றுவேதங்கள் ... ...*
கூறவோர்பூர்வந்தான் கொடுக்குமெனக்கொண்டவுரை ...*
மாறுதருமறையோடு மூன்பின்றிவந்ததாற் ... ... ...*
றேறியவிண்பூமுடிமேற் சேர்ந்துமணந்திகழ்ந்ததுவாம். (௧)

ஆனந்தங்கதியென்ன வறிவழிகைவீடென்கை ... ...*
மூனம்பினுணர்வழிந்தோர்க் குளதாகுமுயர்முத்தி ... ...*
தானிங்குச்சிவப்பொழியத் தழனிற்குமாறில்லை... ...*
ஞானங்கெட்டுயிர்நிற்கு மெனுமுரைதானண்ணுதால் ... (உ)

பிரபாகரன்மதமறுதலைமுற்றிற்று.

---

## சத்தப்பிரமவாதிமதம்.

உரையானதிமையவிறைலுலகாம் ... ... ... ...*
புரையோருணரும் பொருள்பொய்யித்னே ... ... ...*
விரையாதுணரும் மதுவீடெனவே ... ... ...*
வரையாதுரைவாதி வகுத்தனனே... ... ... (க)

பரிணாமவிவர்த்தனமாயமதிற் ... ... ... ...*
றருமாமுலகுள்ளதுசத்தமதே ... ... ...*
பொருளானதுசொன்னலமல்லவெனின் ... ... ...*
மருவாதுபொருட்டிறமற்றிலையே ... ... ... (உ)

பூமாவெனவேயுரையும்பொருளு ... ... ...*
மாமாம்வடிவொன்றிலணைந்திலதா ... ... ...*
ரூமாதரவெய்துசொன்னன்கருவாய்த் ... ... ...*
தாமாம்பொருணெற்பொரிதானெனவே... ... (ங)

சொல்வந்தெழலும்பொருடோன்றுதலாற் ... ...*
சொல்லேபொருளென்று துணிந்திடுநீ ... ... ...*
சொல்லும்பொருளும்முடனின்றதெனிற் ... ... ...*
சொல்லும்பொருளின்றுசொனின்றதுவே... ... (ச)

சத்தப்பிரம்மவாதிமதமுற்றிற்று.

## சத்தப்பிரமவாதிமதமறுதலை.

உரையானதுமையவினாலுலகே ... ... ...*
லுரையாயொருமையலுமுள்ளதென ... ... ...*
வரையாதுணரும்மதுவண்கதியேல் ... ... ...*
வரையாமறையோடுமலைந்தனையே ... ... (௧)

அருவம்முரையாதலினவ்வுருவாய் ... ... ...*
மருவும்பரிணாமமறந்திடுமாம் ... ... ... ...*
பருகுந்ததியானதுபாலதெனி ... ... ... ...*
லுருவம்மதுவாயழியும்முரையே ... ... ... (௨)

ஆயம்முடனந்தவிவர்த்தனமு ... ... ... ...*
மாயவ்வுளதென்றுசொலெவ்விடமு ... ... ...*
மாய்நின்றமைபின்னுரையின்னலமு ... ... ...*
மாயும்பொருளுக்கறிநாமமதே ... ... ... (௩)

உரைபோற்பொருளுக்குருவின்மையினா ... ... ...*
லுரையேயுளதென்றனையின்றரியென் ... ... ...*
றுரையேகவிமாலவனுக்குளதா ... ... ...*
முரையாய்கவியாகவோர்மாலினையே ... ... ... (௪)

நெல்லிற்பொரியாவதுநீடழலிற் ... ... ...*
சொல்லிற்பொருளொன்றுறுதொக்கிடலாற் ... ...*
கல்வித்திறமாமுரைகாட்சியினான் ... ... ...*
மல்லற்பொருள்சாலவளர்ந்தருமே ... ... (௫)

முன்கண்டபொருட்பெயராதலினாற் ... ... ...*
பின்கண்டபிழம்புணரும்பெயரா ... ... ...*
னன்கண்டபொருட்கொருநாசமதின் ... ... ...*
றென்கண்டனைகாரியமின்றழிவே ... ... ... (௬)

பொருளிந்திரியம்முணர்வோடுபுமா ... ... ...*
னிருளின்றியிடும்மொளியித்தனையு ... ... ...*
மருவும்பொழுதில்வருஞானமதி ... ... ...*
லொருவும்பெயரத்தமுதித்திடுமே ... ... ... (எ)

அத்தந்தெளிதற்கொளியானதுபோற் ... ... ...*
சத்தம்பொருடானறிதற்குளதா ... ... ...*
நித்தம்மதுவன்றுணைநின்றழியுஞ் ... ... ...*
சித்தன்னொருவன்னுணைசெய்தனனே ... ... ... (அ)

சத்தப்பிரமவாதிமதமறுதலைமுற்றிற்று.

—o—

## மாயாவாதிமதம்.

நானேபிரமமென்றுணைத்துஞாலம்பேய்த்தேரொனவெண்ணி*
யூனேபுகுந்துநின்றுயிர்கட்குபதேசங்களுணைத்துவரு ... ...*
மானுமதிகேடனுமாயமாயாவாதியேயாகித் ... ...*
தானேயுணைக்குமந்நூலினுண்மைதன்னைச்சாற்றுவாம் ... (க)

அறிவாபகில்காரணமாயனந்தானந்தமாயருவாய்ச் ... ...*
செறிவாயெங்குநித்தமாய்த்திகழ்ந்தசத்தாய்ச்சுத்தமதாய்க்[ப்
குறிதான்குணங்களொன்றின்றிக் கூறும்வேதாந்தனக்களவாய்
பிறியாதனுபூதிகந்தனக்காய்நின்றதந்தப்பிரமந்தான் ... (உ)

ஒன்றுமிரவிபலபாண்டத் துண்டாமுதகத்தங்கங்கே ... ...*
நின்றாற்போலவுடலேருறுநிகழ்ந்துநிற்கும்பொருண்மேற்கண் *
சென்றாற்போலப்புலன்களுக்குஞ்சிந்தைதனக்குந்தெரிவரிதா
மென்றாற்காட்சிமுதலாயவிருமூன்றளவைக்கெட்டாதால் (ரு)

இருளிற்பழுதையரவெனவே யிசையுமிரவியிருங்கதிர்க ...*
ளருளப்பழுதைமெய்யாகியரவும் பொய்யாமதுபோல ... *
மருளிற்சகமுஞ்சத்தாகிமருவித்தோன்றுமாசில்லாத் ... ...*
தெருளிற்சித்தேசத்தாகும்பித்தாஞ்சகத்தின்செயலெல்லாம்()

உலகந்தானுநிருவசனத்துண்டாமின்றேலுதியாது... ...*
நிலவியுண்டேலழியாதுநிற்பதாகுமித்தையா ... ...*
மிலகுசுத்திகனல்சேரவின்றும்வெள்ளிநின்றதாங்... ...*
குலவுசகமும்விவகாரம்பரமார்த்தத்திற்கொள்ளாதால் ... (ரு)

தாங்குமூலகுக்குபாதானஞ்சத்தாஞ்சிலம்பிநூறன்பால் ...*
வாங்கிவைத்துக்காப்பதுபோல்வையமெல்லாந்தன்பக்க ...*
லோங்கவுதிப்பித்துளதாக்கிநிறுத்தியொடுக்கத்திலதாக்கு ...*
மாங்குவந்தவாறதனுற்சத்தாஞ்சகத்தினமைவெல்லாம்... (சு)

மன்னும்பிரமந்தனில்வானும்வானில்வளியாயந்தவளி ...*
தன்னிலழலாயழலின்பாற்சலமாய்ச்சலத்திற்றுரணியாய்ச் *
சொன்னவிதனின்மருந்தாகித்தோற்றுமருந்திலன்னமா......*
யன்னமதனிற்றுவக்காதியாறுதாதுவாயினவால்... ... (எ)

ஆறுதாதுக்களுங்கூடிவந்தகோசமன்னமய ... ...*
மாறில்பிராணகோசமயமன்னுமதனின்மனோமயந்தான் ...*
வேறுவரும்விஞ்ஞானமயமேவுமதனினதுதன்னிற் ... ...*
கூறிவருமானந்தமயங்கோசமயம்பின்கூடியதால் ... (அ)

கோசவுருவிற்பிரமந்தான்கூடித்தோன்றுநீடுமொரு ... ...*
காசமருவுங்கடந்தோறுநின்றற்போலக்கதிரவன்றன் ...*
வீசுகிரணமுருவின்கண்வெளிப்பட்டிடுவதிற்பற்றும் ......*
பாசமதனுக்கின்றுகுமென்றுற்பரத்திற்பற்றுண்டோ ... (கூ)

அலகின்மணிகளவைகோவையடைந்தபொழுதினங்கங்கே *
நிலவுமொருநூல்பலநிறமாய்நின்றாற்போலநீடுருவம்... ...*
பலவுமருவும்பேதத்தாற்பன்மையாகும்பிரமந்தான் ... ...*
குலவுபோகபோக்கியங்கள்கொள்ளும்போன்றுகொள்ளாதால்

போற்றுஞ்செயலாற்பலநாமம்புனைந்துபோகபோக்கியத்திற்*
றேற்றுநனவுகனவினுடன்சுழுத்திதுரியமெய்துமிதற். ...*
கேற்றகரணநிரனிரையேயீரேழ்நாலொன்றெல்லாமு... ...*
மாற்றிநிற்குங்கேடின்றிவுந்தபோகமாய்ந்திடவே ... (௰௧)

கருவியெல்லாநானெனவேகருதல்பந்தமக்கருத்தை ... ...*
யொருவமுத்தியுண்டாகுமுள்ளம்வித்தாஞ்செய்தியினான் ...*
மருவுமாயாகாரியங்களவித்தைமாயவேமாயை... ...*
பிரியும்பிரியாஞானமதுபிறக்கும்பிறவாபேதமே ... (௰௨)

ஆனகன்மவனுட்டயங்களந்தக்கரணசுத்திதரு ... ...*
மூனமின்றியச்சுத்திஞானமதனையுண்டாக்கு ... ...*
ஞானமதுதான்பிரமத்தைநானென்றுணர்த்துநான்பிறந்தால்*
வானமதிநீர்த்துளக்கமெனக்காணுந்தன்னைமாயையிலே.(௰௩)

தானே-தானாயனுபோகந் தன்னிற்றன்னையனுபவித்திட் ... *
டேனயுயிரோயுணர்வேயென் றென்றுமின்றியுணையிறந்து ...*
வானேமுதலாம்பூதங்கண் மாயமாயாதேநின்று ... ...*
நானேபிரமமெனத்தெளியு ஞானம்பிரமஞானமே ... (௰௪)

சாற்றுமறைதத்துவமசிமாவாக்கியங்கடமையுணர்ந்தாற் ...*
போற்றியதுநீயானாயென் றறைவதல்லாற்பொருளின்றே ...*
தேற்றுமிதனைத்தெளியாதார் தெளியப்பஞ்சசாதனமே ...*
லேற்றியியமநியமாதி யோகமிருநான்கியற்றுவரால் ... (௰௫)

மாயாவாதிமத முற்றிற்று.

## மாயாவாதிமதமறுதலே.

ஏகனுனெனவியம்பியிப்படி யறிந்துமுத்தியடைபின்னெனு *
மோகமானவுனாகொம்புமுன்ருடு முடிந்திடாதுமலடாகிய *
காகமானதுகருங்கலின்றசை பறித்தழுங்கரியகுஞ்சியின் [யே
ருகமாபசிதவிர்க்கவாயிடைகொடுத்ததென்றுனாசெய்தன்மை

நீடுவேதமளவாகவேகமெனு நீதிதானிகழ்வதாகுமே ... ...*
ஞடிஞாதுருவுஞானஞேயமொடு நாளுநான்மறையுமோதலா *
லோடுமாகுமுனதேகமோதுமிவை யூனமாகியுனாமாறுகோள்*
கூடுமாகுமனுபூதிதானுமது கூடிடாதறிவிலாமையே. ... (உ)

நீதியாலொளிகொள் பானுவானதக னீரிலேநிகழுமாறுபோ *
லாதிதானுருவ மாயகாயமதின் மேவியாவ்திலேயாகுமாங் ...*
நீதிலாவருவ மாகலானிழல்கள் சேரவேறிடமிலாமையா ...*
லோதிலோரகலி னீரிலேயொருவர்காணலாவிலதுனேகமே. ()

வேறுவாயில்புல னேடுமேன்மனமு மேவிடாதுபிரமாணமுங்*
கூறிடாதுளது தானெனுவுணர்தல் கோடுநீமுயலிஞடினு ...*
யீறிலாதபரமேகமேயென வியம்புநீயிசையுஞானமும் ......*
பேறதாவதிலே பேதமானவிது பேணவேயுளதுபேசிலே. (ச)

இலகுசோதிமணியெனவுமேகமென்னிதனிலேகமதுவிலகினுய்
குலவுகாசுமொளி யதுவுநீடிவளர் குணமுநாடுவதோர் குணியு
மாம்-பலவுமானகுணமொருவுமேகமதுவெனவுநீபகரினிகரிலா
வுலகமானதனே யுதவுமாறதிலே புணர்வுதானுமிலேயுணரிலே. ()

புற்றினேர்பழுதைதொக்கபோதுமயிர்புளகமாகவரவிரவிலே*
யுற்றகாமதனேயொக்கவேயுலகுதிக்குமாறுமொருசத்திலே...*
பெற்றதாகுமெனினப்பிராந்தியுடையோருமப்பிரமபேதமாய்*
நிற்பர்நீபகரின் முற்றுமையநிலேபெற்றுநின்மலமிலாததாம் (கூ)

ஓதியேயுலகமதனைநீயுநிருவசனமாகவுரைசெய்வதென்]... [ல
பேதையோயுளதுமிலதுமல்லபொருள்பேசுவாருமுளரோசொ
யாதியேயுள்துவருதலாலிலதிலாவதின்மையதழிந்துபோ ...*
நீதியாலுளதிலாமைநேர்வதெனின்னேர்மையாகியதுநின்றதே

வேறதாகியதுபோலிருந்தமையில்வெள்ளிசுத்தியெனிலையமே*
கூறலாமொருபரத்தோடொத்தபொருள்கொண்டுவைத்தபடிக
ண்டன-மாறிடாதுநிலநீரதாகியனல்வாயுவாகியவைமாறியுஞ்.
சேறிடாதுவிவகாரமன்றுபரமார்த்தமாயவைசெறிந்ததே ()

மாயநூலதுசிலம்பிவாயினிடைவந்தவாறதனைமானவே ...*
யாயதேயுலகமானதும்பிரமமதனிலேயெனினடங்கிநின் ... *
றேயுமாகுமொருசித்துமத்துடனிலாததென்றுபினியம்பினீ *
பேயனேகடமிருத்தில்வந்ததுபிறப்பதாவதிலைபேசிலே... (கூ)

வேறதாகுமுருவத்திலேபரம்வெளிப்படும்மெனவிளம்பினீ *
யூறிலாவொருசவத்திலேபிரமமுண்டுகாணுணர்வதின்றுதான் *
மாறிவாயுவுமனுதியானவையும்வந்திடாமையினின்றெனி *
னீறுதானுடையதாயதோபிரமமென்கொலோவிவையிறப்பதே

பற்றநின்றியுடனின்றிடும்பரமெனப்பகர்ந்தனைபரிந்துட ...*
னுற்றுடம்புதிரைநோய்நரைச்சிறை யுறுப்பழிந்திவையுமுள்ள
பின் - குற்றமென்றிதனைவிட்டிடாதுவிட வென்றலுங்குலைவு
கொண்டிடும் - பெற்றிகண்டுமொருபற்றறும்பரிசுபேசவேபு
ளதுறைசையே... ... ... ... ... (௰க)

சோதிமாமணிகளூடுபோனதொருநூலுமானநிலைசொல்லிடு *
நீதியான்மணிகள்பேதமாகியொருநூலினின்றமைநிகழ்த்திடு.
யாதிதானொருவனாகியேபலவநந்தயோனியிலமர்ந்தவன் ...*
பேதியாதநிலைபேசினுலகுபேதமேயிலதபேதமே ... (௰உ)

ஓத்துநின் றுடலினின்பதுன்பமவை யுற்றுமுற்றிடுவதின்றெனு
ம் - பித்தவுன்னுரையினுற்றதேதிலது பெற்றதின்றிலதுபெற்ற
தேற் - றுய்த்தலின்றுறுதல்சீவபாவமதுசொல்லினென்றினுந்
தோய்விலாமைநீ -வைத்துநித்தமனவாக்கிறந்தபரமென்னமா
னமிலேயின்னமே ... ... ... ... ... ... ... (௰௩)

எங்குநின்றிடிலவத்தையின்றிடு மிசைந்திடுங்காண மென்னினீ
யங்குநின்றபரமெங் கொளித்ததிதுநின்றதேலவையடங்கிடா *
விங்குநின்றதொருகாந்தமான சலிரும்புசன்னிதியங்குநேர் *
தங்கிநின்றதெனிலிங்குமீளும்வகைதந்திடாதுனுரைதப்பதே. ()

இருள்பொதிந்ததொருபருதியிவ்வுலகி லிசையிலின்றுடலநா
னெனு - மருள்பொதிந்ததொருபிரமமிங்குளது மருவிநின்றவு
ருவொருவியே - தெருள்பொதிந்துபரனுனெனுந்தெளிவு செ
ன்றபோதுகதியென்றிடும் - பொருள்பொதிந்ததெனினமலனு
க்குமலம் வருதலாலுள்துபுன்மையே ... ... ... (௰௫)

சுத்தமானதுபரத்தினுக்கணைவதின்றுசுத்தமதநாதிநீ ... ...*
வைத்தமாயமுறுசித்தசுத்தமுறமற்றதற்குமலம்வைத்தனை *
யொத்தசீவன்மலசன்மமாயையுறுகின்றகாரணமுணர்ந்திடாய்
பித்தனேயிறகினிற்பிறப்பதெரி யென்னின்வேறுபொருள்பெ
ற்றதே ... ... ... ... ... ... (௰௬)

உன்னினீயுமனுபோகமென்றபொழுதுற்றிடுந்துவிதமற்றதிங்*
கென்னிலில்லையெனிலில்லைநீயுமறி வின்மைகண்டவிடமுண்
மையேன் - மன்னுமோருணர்வுவந்திடும்முணர் வெலாமுமா
யையெனின்மாயையே - சொன்னதோர்பிரமமாயிடும்பிர
மமாயையாயறிவுசோருமே ... ... ... ... (௰௭)

ஆரணங்கடருதத்துவம்மசிபதங்களின்பொருளறிந்திடாய்...*
காரணம்மதுவுநீயுமென்றிருமைகண்டுவேறின்மைகருதலா *
னாரணன்பிமனுலுநாடரியநாயகன்கழற்கணண்ணிநீ... [டே
யேரணைந்துபொலிசாதனங்கள்கொடு யோகஞானமுமிபற்றி

மாயாவாதிமதமறுதலைமுற்றிற்று.

———o———

## பார்க்கரியன்மதம்

மன்னுமறையின்முடிவென்றுமாயாவாதியுடன்மலைந்து ...*
பின்னமாகிப்பிரமத்தைப்பேதாபேதஞ்சாதித்துப்... ...*
பன்னுமதுநூலதுவாகப்பாரின்மீதுபார்க்கரியன் ... ...*
சொன்னவிதனையிந்நூலினகத்தேதோன்றச்சொல்லுவாம் (௧)

சித்தேயுலகாய்ப்பரிணமித்துச் சீவனாகித்திகழ்ந்தமையாற் *
சத்தேயெல்லாமுத்தியினைச் சாரக்கண்டஞானங்கள் ...*
வைத்தேமொழியுமாமறைகள் சொன்னமரபேவந்தக்கா ...*
லொத்தேகெட்டுப்பிரமத்தோ டொன்றாய்ப்போமென் றுரைத்
தனனே. ... ... ... ... ... ...*

பார்க்கரியன்மத முற்றிற்று.

———o———

## பார்க்கரியன்மதமறுதலை.

இயம்புகின்றதுலகாயிடாதுசட மின்றிநின்றுசடமாகியே *
முயங்குகின்றமையிலிலவணத்திரத முழுதுமேகமதைமுயல்
கைபோற் - பயந்ததென்னிலறியப்படும்பொருளு மறிவுமென்
றுபலவாகுமோ - தியங்குகின்றதெனுணர்த்திடாய்கடின மாதி
யாகிவருசித்தனே. ... ... ... ... (௧)

உன்னுகின்றபிரமத்திலேசிறிதிவ் வுலகமானதெனவோதினீ *
மன்னுகின்றசிலகாலமோடழியுமழிய வந்ததவுமாயையாற் *
றன்னிலொன்றுமெனில் வருதலோடிறுதி தருதலாலதுசடத்
ததா-முன்னோடச்சகமுமுண்மையன்றுசட மென்னவேயுறுதி
மன்னுமே. ... ... ... ... (௨)

வித்தெழுந்துமரமாய்விளைந்தமை விளம்பினுலவமைவேறுநீ *
நித்தமென்றவுரை பொய்த்துநீடுசக மாயெழுந்தழியுநின்பர *
மொத்தெழும்பொழுது வித்திறுக்கவனி யுண்டுதாரசமுனக்கெ
னோ - பித்தனென்றுல குரைத்திடும்பிரம மாயினுயிவைபிதற்
றியே. ... ... ... ... ... (௩)

சூடகங்கடகமோதிரஞ்சவடி தொடரோடாரமுடிதோடுநா *
ணுடகந்தருவதாகுமிப்படி யனைத்துமப்பிரமமாகுமே [திடு
னீடிடும்பணிகள்செய்துளோரவை புனைந்துளோர்களை நிகழ்த்
நாடிடுஞ்சகமியற்றுவோர்கொடு நடத்துவோருளர்நவிற்றிலே.

அறிவினோடுசெயன்மாறவீடதனை யணுசொணுதவையிரண்டினு
லுறுதியானபிரமத்தினோடழிய வொன்றலாமெனவுரைத்திகா
ணிருதியலதனோ டிசைவதின்றிசைவ துள்ளதாயிடினவ்வி
ன்பமே-பெறுதிநீயுடலோ டுயிர்களாயறிவு பிரியுமாறுசெயல்
பெறுவதென். ... ... ... ... ... (௫)

பாற்கரியன்மதமறுதலை முற்றிற்று.

---

## நிரீசுரசாங்கியன்மதம்.

மூலம்புரியட்டகம்விகிர்தி யாகிமூன்றுய்ப்பிரகிருதி ... ...*
தாலஞ்சூக்குமம்பரமாய்ச் சுத்தப்புருடன்சன்னிதியிற் [ஞ்
பாலன்சேட்டைபுரிந்துலக மியோனிபலவாய்ப்பரந்தொடுங்கு
சாலவன்றுநிரீசுவர சாங்கியன்றன்சாற்றிடுமே ... (க)

நிரீசுரசாங்கியன்மதமுற்றிற்று.

## நிரீசுரசாங்கியன்மதமறுதலை.

சுத்தனறிவன்புருடனெனிற்சூழாதாகும்பிரகிருதி... ...*
பெத்தனீங்கினாலும்பின்பெத்தனுவன்பேரறிவாற் ... ...*
சுத்தமேவும்பிரகிருதிகண்டுகெழிக்கமாட்டானேன் ... ...*
முத்தனுகான்சுத்தனுக்குமூலப்பிரகிருதியிலையாம் ... (க)

புருடன்பிரகிருதிபெற்றூற்போதஞ்சிறிதங்குண்டாகிச் ... ...*
குருடன்முதுகின்முடவனிருந்தூர்ந்தாற்போலப்பிரகிருதி [யு
யிருடன்விடத்தேயிருந்தியங்குங்கன்மாலிறையன்றிரண்டினை
மருடனுருவாய்ச்சேட்டிப்பித்தறியுமமலனரனேயாம் ... (உ)

அறியான்புருடன்பிரகிருதியசேதனங்காரியத்தினுக்குக் ...*
குறியாய்நாதனுளனென்றுகூறுமுத்திவிவேகமெனிற் ... ...*
செறிவாந்தலைபோகாதறியிற் சேர்த்தோன்வேண்டுஞ்செய
லிற்போ - நெறியாற்பணிசெய்துடற்பாச நீக்கிக்கொண்ணீசி
ன்மலனால் ... ... ... ... ... ... (ஈ)

நிரீசுரசாங்கியன்மதமறுதலைமுற்றிற்று.

---

## பஞ்சராத்திரிமதம்.

ஆதியாயருவமாகியகண்டபூரணனாய்ஞானச் ... ...*
சோதியாய்நின்றமாயன்சுவேச்சையாலுருவுகொண்டு ... ...*
நீதியாக்கருணையாலேநீள்கட்டற்றுயின்றுநூலு ... ... ...*
மோதினனென்றுபஞ்சராத்திரியுரைப்பனுற்றே ... .... (க)

உந்தியில்யனையீன்றங்கவனைக்கொண்டுலகுண்டாக்கி ... ...*
யந்தநல்லுலகழிக்கவரனையுமாக்குவித்துத் ... ... ...*
தந்திடுஞசகத்தினுக்குத்திதிகர்த்தாதானேயாகி ... ... ...*
வந்திடுந்தோற்றமீறுமில்லையும்பண்ணுமாயன் ... .... (உ)

மீனாமைகேழனரசிங்கம்வாமனனாய்வென்றி ... ...*
யானாதவிராமர்மூவராயணாயளித்தான்கற்கி ... ...*
தானாயும்வருவனின்னமென்றவன்சாற்றித்தேவர் ... ...*
கோனாயுநிற்பனென்றுகூறுவன்குறிப்பினோடே... ... (௩)

ஏழ்கடல்செலுவிலேற்று மிருங்கிரிமுதுகிலேற்றுந் ... ...*
தாழ்தலமுழுதுங்கீண்டுந் தமனியனுடல்பிளந்தும் ... ...*
வாழுலகளந்துமன்னாய் மன்னர்க்குமன்னராயும் ... ...*
பாழ்படவுழறிப்பாரு நோக்கும்பின்பரியுமாயே. ... (௪)

பொய்கைவாய்முதலைவாயிற் போதகம்போதமாட்டா ...*
தையனேநாதாவாதி மூலமேயென்றழைப்ப ... ...*
வுய்யயாம்பணிமாலோல மோல்மென்றோடிச்சென்று ...*
வெய்யவாய்முதலைவீட்டிக் கரிக்கும்வீடருளினானே. ... (௫)

அ[illegible]கடல்கடைந்துவானோர்க் கமுதினையளித்துந்தீய ...*
கொலைபுரியசுரர்தம்மைக் கொன்றுலகங்கள்காத்துங் ...*
கலைமலிபொருளன்பர்க்குக் கருணையாலுரைத்துமிக்க ...*
தலைமையினிற்பன்மாய னென்றுபின்சாற்றினானே ... (௬)

மாயையாயுயிராய்மாயா காரியமாகிமன்னி .... ...*
மாயையாற்பந்தஞ்செய்து வாங்கிடுமவனலன்றி ... ...*
மாயைபோகாதென்றெண்ணி மாயனைவணங்கப்பின்னை ...*
மாயைபோம்போனான்மாயன் வைகுண்டம்வைப்பனன்றே.()

பஞ்சராத்திரிமதம் முற்றிற்று.

## பஞ்சராத்திரிமதமறுதலை,

ஆதிதானாகிலாதிக் கந்தமுண்டாகுமந்தக் ... ...*
கோதிலானிறைவனென்று கூறிடும்வேதஞானச் ... ...*
சோதியாய்நின்றானாகிற் றோய்ந்திடான்மாயைஞானத் ...*
தீதிலாவுருவமென்னிற் சேர்ந்திடாதாதுச்சென்றே. ... (௧)

தாதுவானதுவேதென்னிற் சங்கரன்பலிக்குச்செல்லத் ...*
தீதிலாக்கோதண்டத்தைத் திறந்தவன்விட்டபோது ...*
போதுவதுதிரமன்றோ போந்துமூர்ச்சித்துவீழ்ந்தா ... ...*
னாதனொழுப்பப்பின்னே நடந்தனன்கிடந்தவன்றான் (௨)

இச்சையாலுருவங்கொள்வ னரியெனிலிகழ்வேள்விக்க ...*
ணெச்சனாயுண்ணப்புக்கங் கிருந்தவன்றீசனாலே ... ...*
யச்சமார்தலையறுப்புண் டான்றலையாக்கிக்கொள்ளா ...*
னச்சினார்போற்றநாத னாரணன்றலைகொடுத்தான் ... (௩)

நூலினையுணாத்துவேதநூலயனுவலும்வண்ண ... ...*
மாலருள்செய்தானென்றாய்மறைநீதியுலகியற்கை ... ...*
சாலவேதெரியாதாகிக்கிடந்தநாட்சகத்தியார்க்கு ... ...*
மாலின்கீழிருந்துவேதமருளினானறைந்தானாலே... ... (௪)

அயன்றனைப்பயந்தானென்றாயரியயன்சிரஞ்சேதிப்பப் ...*
பயந்திடான்றலைமாறானும்படைத்திடான்சிரத்தைக்கிள்ளுஞ்.*
சயந்தருமரனைத்தந்தானயனென்கைதப்பேயன்றோ ... ...*
தியங்கிடாதுணராயெல்லாஞ்சிவன்செயலென்றுதேர்ந்தே. ()

சீவன்கள்சனனம்போலச்சிலர்வயிற்றுதித்தமாலைத் ... [பீர்
தேவென்றேவையங்காக்கச் சுவேச்சையாற்செனித்தானென்
பூவன்பின்படைக்கமாட்டாதரனடிபோற்றவேதக்... ...*
கோவந்துமுகத்திற்றோன்றிச் சிருட்டியைக்கொடுத்தல்கூறும்,

நாரணனயனையீன்றுமயனுநாரணனையீன்றுங் ... ...*
காரணமொருவருக்கங்கொருவர்தாமிருவருக்கும் ... ...*
வாரணமுரித்தவள்ளல்காரணமென்றுமன்ற ... ...*
வாரணமுரைக்கும்பக்கத்தவர்களுமறைந்தாரன்றே ... (எ)

அழிப்பரியேவலென்றுயரிதனையழிக்குமன்றங் ... ...*
கழிப்பதுதவிர்க்கமாட்டானங்கமுமழித்தேபூண்டா ... ...*
னழிப்பரியேவலென்றங்கரைந்ததுமழிந்ததன்றே ... ...*
வழித்திடுமரனேயாக்கநோக்கமுமாக்குவானே ... ...(அ)

வானங்கீழ்மண்ணுமெல்லாமாயனேகாப்பானென்றாய் ... ...*
தானஞ்சுஞ்சலந்தரன்றன்னுடல்கீண்டசக்கரத்தை ... ...*
யானஞ்சுமாடுவான்பாற்பெற்றுலகளித்தவார்த்தை ... ...*
தானெங்குமாகுமெல்லாஞ்சங்கரன்காப்பேயாமே ... (கூ)

மாலினார்சேலினாராய்வாரிகளடக்கிக்கொண்டன் ... ...*
றாலியாவுலகமெல்லாமழிப்பவனானேயென்னச் ... ...*
சேலினார்தமைப்பிடித்துச்செலுவினையிடந்துகண்ணைச் ... ...*
சூலியாமேலணிந்தான்சூலிதானாகுமன்றே ... ... (ய)

ஆமையாய்மேருத்தாங்கி யடைகலாய்க்கிடந்தபோது ... ...*
நாமெனுவுலகாதார நாதனென்றகந்தைபண்ண ... ...*
வாமெனாரன்றுமென்னா ரமரருமானார்பார்த்துத் ... ...*
தாமந்நாளாமையானைத் தகர்த்தோடுதரித்தாரன்றே ... (யக)

எழுதலமிடந்துபன்றி யாயிருங்கொம்பிலேற்றுத் ... ...*
தொழுதுலகிறைஞ்சநின்ற சோதிநானென்றபோதன் ... ...*
றழுதலம்வந்துவீழ வருங்கோடுபறித்தணிந்தான் ... ...*
கழுதலம்வந்தகாட்டி லாடிடுங்கடவுளன்றே. ... ...(யஉ)

இங்கடாவுளனேமாலென் றிரணியன்றூணையெற்ற ... ...*
வுங்கடாமோதரன்று னுருநரசிங்கமாகி ... ... ...*
யெங்கடாபோவதென்ன வுடல்பிளந்திறையானென்ன ...*
வங்கடாசிம்புளாகி யெடுத்தடர்த்தானரன்றன். ... (யரு)

தானமென்றிரந்துசெல்லத் தனக்குமூவடிகொடுப்ப ... ...*
வானமுமளந்துகொண்டு மாவலிதன்னைப்பின்னை ... ...*
யீனமாஞ்சிறையிலிட்டா னிறையன்றென்றீங்தோர்தங்கட் *
கூனஞ்செய்திடுவோர்தாங்க ளுத்தமரல்லராகும் ... (யசு)

மாயமான்றன்னைப்பொய்மா னென்னவறியாதரக்கன் ... ...*
மாயையிலகப்பட்டுத்தன் மனைவியைக்கொடுத்தான்றன்னை *
மாயைக்குக்கர்த்தாவென்பை மதிகெட்டங்கவனைக்கொன்று*
நாயனார்தமைப்பூசித்தான் கொலைப்பாவநணுகிடாமே (யரு)

பரசுடன்பிறந்தான்றனும் பத்தனுய்ப்பரசினாலே ... ...*
யரசறுத்தரனைநோக்கி யருந்தவம்புரிந்தானன்று ... ...*
பரசியபரசிராமன் பலதேவனுலகமெல்லா ... ... ...*
முரைசெயுமுமையாள்கோனை யுண்ணினைந்தியோகினின்றன்.

ஓதியவாசுதேவர் தமையுபமன்னியதேவர் ... ... ...*
தீதிலாநோக்கஞ்செய்து சிவகரஞ்சிரத்திற்சேர்த்தி ... ...*
யாதிபாலடிமையாக்க வரியுடல்பிராணனத்த ... ...*
மீதெலாங்கொண்ணீயென்றங் கிறைஞ்சினனறிந்திடாயே. ()

பின்வரும்பரிதானகியரியென்றய்பின்புவந்தா ... ...*
லென்வருமீசனலென்றறிகிலோமிவுளியார்க்கு ... ...*
முன்வருமவதாரங்கண்முடிந்தமையறிந்தாயன்றே ... ...*
பொன்வருஞ்சடையினன்றன்புகழெங்கும்புக்கதன்றே (யஅ)

கைவனாமூலமேயோவெனக்கரிக்குதவுங்காட்டின் ... ...*
மொய்வனாயெடுத்தான்மூலமாயிடவேண்டுமோதா ... ...*
னையனேமுறையோர்வென்றாலரசனோவங்குச்செல்வான் ...*
வையகங்காப்பான்செல்கைவழக்கன்றோவூர்காப்பான்போல (

அன்றியுமியானைமாலுக்கடிமையாய்மூலமேயோ ... ...*
வென்றிடுமதனான்மாறானிறைவனென்றியம்பவேண்டா......*
வுன்றனக்கடிமையானானுன்னையெம்பெருமானென்று... ...*
லின்றுநீவணங்குமுன்றனெம்பெருமானோநீயே... ... (௨௰)

ஞாலமுண்டவனாலுண்டார்நல்லமுதமரரொன்றாய்... ...*
வேலைநஞ்செழமாலாதிவிண்ணவர்வெந்துசென்று ... ...*
காலமின்றெமக்குக்காவாய்கடவுளேயென்னநாத... ...*
னாலமுண்டிலனேற்றேவரமுதமுண்டிடுவதெங்கே ... (௨௧)

அஞ்சியன்றரிதானோடவசுரனைக்குமரனாலே ... ...*
துஞ்சுவித்தொருபெண்ணாலேதாருகனுடறுணிப்பித் ... ...*
தஞ்சிடப்புரந்தீயூட்டிச்சலந்தரனுடல்கீண்டோத ... ...*
நஞ்சினையுண்டுமன்றோநாயகனுலகங்காத்தான்... ... (௨௨)

பார்த்தனாரிரதமேறிப்படைதனைப்பார்த்துச்சார்வைக் ... ...*
கூர்த்தவம்பாலேயெய்துகொன்றரசாளேனென்னைத் ... ...*
தேர்த்தனிலிருந்துமாயைசெய்துமால்கொல்லச்செப்பும் [யே
வார்த்தைநூலாக்கிக்கொண்டாய் புரங்கொனான் மதித்திடா

மாயைதானுயிர்களாகாவுயிர்கடாமாயையாகா ... ...*
மாயவனிவைதானாகானிவைதானுமாயனாகா ... ...*
னேயுமாமநாதியாக விறைபசுபாசமென்றே ... ...*
தூயவன்கலப்பினாலேயெல்லாமாய்த்தோன்றுவான்காண். ()

யாசத்தைப்பசுக்கள்விட்டுப் பதியினையடையமுத்தி ...*
யாசற்றவாகமங்க ளறைந்திடவறிவின்றிங்கே ... ...*
மாசற்றமான்மாசாகி மாயையுமுறுவனென்னிற் ... ...*
கூசிப்பின்கொள்ளார்நல்லோ ருனக்காமிக்குழப்புநூலே ()

பிரமனானென்றபோது பிரமனோடரியுங்கூடிப் ... ...*
பரமனரிசவிடாமற் பார்த்திடர்பண்ணிநின்ற ... ...*
பரமனாழலுருபந் தன்னையுமுணரமாட்டான் ... ...*
கரமங்காடிகிரியேற்றான் கடவுளென்றறைவதென்னே. (உ௬)

தேரரியிறையன்றென்றே சிவமுனிததீசனோடே ... ...*
போர்புரிந்திகலமாலைப் புக்கவன்பிடித்தடித்து ... ...*
மார்பினிலுதைத்துமாறன் சக்கரம்வயிற்றில்வைத்திட் ...*
டேர்மலிபடைபடைத்திட் டரிபடவெறிந்தானன்றே. (உ௭)

சூலிகாணிறைமாலல்லன் சூலியைத்தொழுந்துர்வாசன் ...*
மாலினார்மார்மிதிப்பத் திருமறுமார்பனாகி ... ...*
நூலினார்மார்பனேன்றான் பட்டிடஞ்சுத்தமென்று ... ...*
பாலினார்கடலானங்கே பரிவொடுந்திருவைவைத்தான். (உ௮)

தவகுணனாய்மால்சென்று தீவியைச்சக்கரத்தா ... ...*
லவகுணஞ்செய்தன்றேடப் பிருகுவந்தவளைப்பார்த்துச் ...*
சிவனலமறியேனாகி விதுசெய்தோன்செறிகபத்துப் ... ...*
பவமெனமொழியமாலும் பயப்பட்டுப்பதறிவீழ்ந்தான். (உ௯)

பயப்பட்டுப்பரனைநோக்கித் தவம்பண்ணப்பரனுந்தோன்றி *
நயத்தஞ்சலென்றுவேண்டிற் றென்னெனநாரணன்றான் ...*
பெயர்த்தருள்பிருகுசாப மெனவன்பன்பிருகுவென்ன ...*
வுயக்கொண்ணீபவர்தோறென்னவோமென்றானுலகநாதன் ()

இப்படிப்பிருகுசாபத் தீரைந்துபிறப்பில்வீழ்ந்து ... ...*
மெய்ப்படுதுயரமுற்று வருபவன்விமலனல்ல ... ...*
னெப்படியானுஞ்சொன்னே னிறையரியல்லனென்றே ...*
மைப்படிகண்டனண்டன் மலரடிவணங்கிடாயே. (௩௧)

பஞ்சராத்திரிமதமறுதலை முற்றிற்று.

சிவஞானசித்தியார்பரபக்கமூலமுடிந்தது.

ஆகத்திருவிருத்தம் ௩௱௧.

திருச்சிற்றம்பலம்.